# மாதநிலா

உங்கள் குடும்ப நிலா


MATHANILA மாதநிலா

நிலா - 21 Regd No: 1419 01 ஜூலை 2014













நுளம்பை வைத்தே மலேரியாவை தடுக்கலாம்

தமிழ் தட்டச்சு உருவானது இப்படிதான்

விஜய், அமலாபால் திருமணம்

இவரை நம்மில் பலருக்கு தெரியவே தெரியாது

பெண் ஒருவருக்கு தன் இதயத்தை கொடுத்த லோகநாதன்

ரம்புட்டான் என்ற பெயரின் அர்த்தம் அறிய வேண்டுமா?

கூலிங்கிளாஸ் அணியும் ஆண்களை எனக்கு பிடிக்காது!

-அனுஷ்கா

இம்மாத குட்டீஸ்

அறிவு! ஆனந்தம்!! ஆச்சரியம்!!!



# New Five Star

## Beauty Care

- Skin Care Service (All Facial and Act)
- Hair Care Service (Hair Style and Treatment)
- Bridal Dressing (Hindu, Christian, Reception Party)
- All Kind of Tailoring Service
- Diploma in Beauty culture - 3 month
- Diploma in tailoring

Facial 800/- - 6000/-
Icing Cake upto 1500/-
All Kind of classess

No:11, Mill Road, Vavuniya.
T.P: 077 9049492

# Uma Travels & SRV Transport

Wedding Car,
Van & Bus for Hair



Uma vasa, Kanthasamy Kovil Road,Vavuniya.
077 7476749 / 077 7564956

**மாதநிலா**
உங்கள் குடும்ப நிலா!
MATHANILA மாதநிலா

இதழாசிரியர்
**திருமதி.அனிதா விஜய்**

நிர்வாக இயக்குனர்
**திரு.எஸ்.விஜய்**

கணினி வடிவமைப்பு,
அச்சுப் பதிப்பு
**விஜய் அச்சுப் பதிப்பகம்**
172, மில் வீதி, வவுனியா.
024 222 5799 / 077 900 9491

வெளியீடு
**பதிப்புநிலம் வெளியீட்டகம்**
172, மில் வீதி, வவுனியா.
024 222 5799 / 077 900 9491

**அனைத்து ஆக்கங்களையும் கருத்துக்களையும் அனுப்ப வேண்டிய முகவரி**

ஆசிரியர்,
**"மாதநிலா"**
172B, மில் வீதி, வவுனியா.



**எமது சஞ்சிகையில் வெளிவந்திருக்கும் ஆக்கங்களுக்கு அவரவரே பொறுப்பாளிகளாவர்**

**விளம்பரங்களில் உள்ள விடயங்களுக்கு விளம்பரதாரர்களே உரித்தாவார்கள்**


## இம்மாத நாயகன்



**ஜூலியஸ் சீசர்**

ரோம் வரலாற்றில் ஜூலியஸ் சீசருக்கு முக்கிய இடமுண்டு.

அவர் மாவீரர் மட்டுமல்ல , எழுத்தாளருங்கூட . பிரான்சைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்ற அவர் , அதற்காகத் தாம் நிகழ்த்திய போர்களை விவரித்து நூல் இயற்றியுள்ளார் அதன் தலைப்பு தே பெல்லோ கல்லிக்கோ (De Bello Gallico ) .

உலகு முழுதும் பயன்படுகிற கலண்டரை உருவாக்கியவர் அவர்தான் 12 மாதம் , 365 1/4 நாள் கொண்ட அது ஜூலியன் காலண்டர் எனப்படுகிறது அதில் ஒரு மாதத்துக்குத் தமது பெயரை அவர் சூட்டினார்: அதுவே ஜூலை.

4 ஆண்டுக்கு ஒரு லீப் ஆண்டு அதில் உண்டு.

அந்தக் காலண்டர் நெடுங்காலத்துக்குப் பின்பு சிறுசிறு மாற்றங்கள் செய்யப்பட்டு இப்போது கிரிகோரியன் காலண்டர் என்றழைக்கப்படுகிறது.

தாயின் வயிற்றிலிருந்து குழந்தையை எடுப்பதற்குச் செய்யும் அறுவையை ஏன் சிசேரியன் என்கிறோம்?

அவ்வாறு பிறந்த முதல் குழந்தை சீசர்தானாம் அதனால் அந்தப் பெயர்.


# ஆன்மீகத் துறவி விவேகானந்தர்

சென்றமாத தொடர்ச்சி....

உலக மேதைகள் இந்திய தேசத்தின் வலிமையைப் புரிந்து கொள்வதற்கும், இந்து மதத்தின் மேன்மையை உலக மதவாதிகள் தெரிந்து கொள்வதற்கும் காரணமாயின.

அப்போது இராமநாதபுரம் மன்னராக இருந்தவர் பாஸ்கர சேதுபதி. இவர் ஆன்மீகத்தில் அறிவாற்றல் மிக்கவராகவும் சொற்பொழிவு நிகழ்த்துவதில் வல்லவராகவும் திகழ்ந்தார். அதனால் அமெரிக்காவில் உள்ள சிகாகோவில் நடக்க இருந்த உலக ஆன்மீக மாநாட்டில், இந்து மதத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ள மன்னருக்கு அழைப்பு வந்தது.

இந்த அழைப்பு மன்னருக்கு வந்த வேளையில்தான் விவேகானந்தர் இராமநாதபுரம் வந்திருந்தார். விவேகானந்தருக்கும் மன்னருக்கும் அறிமுகம் ஏற்பட்டது. அறிமுகம் நட்பாக மாறியது. நட்பு விவேகானந்தரிடம் மன்னரை பக்தி செலுத்த வைத்தது.



விவேகானந்தர் அறிவாற்றலும், ஆன்மீகச் சிந்தனையும் தெளிந்த பார்வையும், தேர்ந்த ஞானமும் மன்னரை வியக்க வைத்தது. அதனால் தம்மைவிடச் சிறந்தவரான விவேகானந்தர் சிகாகோ செல்வதே சிறந்தது என்று மன்னர் முடிவு செய்தார். முடிவை விவேகானந்தரிடம் தெரிவித்தார். யோசித்துச் சொல்வதாகச் சொல்லிவிட்டு விவேகானந்தர் மன்னரிடம் விடைபெற்றார்.

அதன்பின் தாம் அமெரிக்கா செல்வதாக விவேகானந்தர் சென்னையிலிருந்து அறிவித்தார். அதையறிந்த இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதி, விவேகானந்தர் அமெரிக்கா செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்தார்.

1893 மே 31 அன்று அமெரிக்கா புறப்பட்ட விவேகானந்தர், ஜூலை மாதத்தில் அமெரிக்காவில் உள்ள சிகாகோவை அடைந்தார்.

உலக ஆன்மீக மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன் 'மெட்காப்' என்ற நகரில் மகளிர் மன்றக் கூட்டத்தில் 'இந்தியப் பெண்கள்' என்ற தலைப்பில் விவேகானந்தருக்குப் பேசும் வாய்ப்புக் கிடைத்தது. இதுதான் அமெரிக்க மண்ணில் ஒலித்த விவேகானந்தரின் முதல் முழக்கமாகும்.

பெண்கள் நிறைந்த அந்த மாநாட்டில் விவேகானந்தரின் முழக்கம் எழுச்சியோடு வரவேற்கப்பட்டது. இந்த மாநாட்டில் கலந்துகொண்ட ஒரு இளம் பெண் விவேகானந்தரின் மீது அளவற்ற அன்பு கொண்டாள். அதனால் அமெரிக்காவில் விவேகானந்தரின் ஒவ்வொரு காலடியையும் இந்த இளம் பெண் உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கினாள்.

இந்த மாநாட்டிற்குப் பின் உலக ஆன்மீக மாநாட்டில் கலந்து கொண்ட விவேகானந்தர், அனைத்துச் சமயத்தைச் சார்ந்தவர்கள் பேசுவதையும் கவனித்தார். அங்கு பேசிய மேலைநாட்டு மத போதகர் அனைவரும் "ஜென்டில்மேன்" என்று தங்களின் பேச்சைத் தொடங்கினர். இந்த வார்த்தை கூடியிருப்பேருக்கும், சொற்பொழிவாளருக்கும் இடைவெளி ஏற்படுத்துவதாக விவேகானந்தர் எண்ணினார்.

செப்டம்பர் 11-ம் தேதி விவேகானந்தர் பேச வேண்டிய முறை வந்தது. அவர் மேடை ஏறியதும், வேடிக்கைப் பொருளைப் பார்ப்பதுபோல் அனைவரும் விவேகானந்தரைப் பார்த்தனர். அவருடைய காவி உடையும், தலைப்பாகையும் மேலை நாட்டவர்களுக்குச் சிரிப்பை உருவாக்கியது.

பேண்ட், கோர்ட், டை என் மேடையில் பேசியவர்கள் மத்தியில் இப்படியொரு கோலத்தில் விவேகானந்தர் மேடையில் தோன்றியதும், கூடியிருந்தோரில் பலர்

(தொடரும்...)

## மலேரியாவை நுளம்புகளைக் கொண்டே அழிக்கும் முறை கண்டுபிடிப்பு




நுளம்புகளினால் பரவும் மலேரியா நோயை நுளம்புகளைக் கொண்டே ஒழிக்கும் புதிய முறையை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

லண்டனில் உள்ள இம்பெரியல் கல்லூரியை சேர்ந்த விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், மலேரியா Anopheles gambiae என்னும் பெண் நுளம்புகளால் அதிகம் பரவுவதாகவும், இந்த நுளம்புகளின் உற்பத்தியை குறைப்பதன் மூலம் மலேரியாவை முற்றிலுமாக ஒழிக்கலாம் எனத் தெரிவிக்கபட்டுள்ளது.

இதன்படி, விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வில், உற்பத்தி செய்யப்பட்ட புதிய மரபணு மூலம் Anopheles gambiae பெண் நுளம்புகள் உருவாகாதப்படி திட்டமிட்டனர். மரபணுவின் மூலம் பெண் கொசுக்கள் உருவாகாமல் இருந்தால் மிக விரைவாக மலேரியாவை முற்றிலுமாக ஒழிக்க முடியுமென விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## “மங்கல்யான்” பாதை யூன் 11ம் திகதி மாற்றும்



செவ்வாய் கிரகத்தை நோக்கி செலுத்தப்பட்ட மங்கல்யான் விண்கலம் பாதையை ஜூன் 11ம் திகதி மாற்றம் செய்தது இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ). செவ்வாய் கிரக ஆராய்ச்சிக்காக ரூ.450 கோடி செலவில் மங்கல்யான் என்ற விண்கலத்தை இஸ்ரோ கடந்த ஆண்டு நவம்பர் 5–ம் தேதி அனுப்பியது. மொத்த தூரத்தில் மூன்றில் இரண்டு பங்கை, அதாவது 480 மில்லியன் கி.மீ. தூரத்தை மங்கல்யான் கடந்து சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இதன் பாதையை சரிப்படுத்த கடந்த மாதம் திட்டமிடப்பட்டது. பின் அது தேவையில்லை என்பதால் இந்த பணியை இம்மாதம் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. இந்நிலையில் கடந்த மாதம் 11ம் தேதி விண்கலத்தின் பாதையை சரிப்படுத்தியது. அதற்கடுத்து ஆகஸ்ட் மாதம் விண்கலத்தின் பாதை சரி செய்யப்படும். செப்டம்பர் 24ம் தேதி அன்று மங்கல்யான் செவ்வாய் கிரகத்தின் சுற்றுவட்ட பாதையில் நுழைக்கப்படும்.

## நிஜங்களின் வெளிப்பாடு

உலகமே ஒரு நாடக மேடை அதில் நாமெல்லாம் பாத்திரங்கள் என்று சும்மாவா சொன்னார்கள்? ஆம் மனிதனால் பிறந்த ஒவ்வொருவரும் ஏதோ ஒரு குறிக்கோளுடனும் நியாயமான ஆசைகளுடனும் வாழ எண்ணியும் அவற்றை எல்லாம் புதைத்துவிட்டு பொய் முகங்களாக பல முத்திரைபோட்டுக் கொண்டும் எம்மைச் சுற்றி நாமே ஒரு வட்டத்தை போட்டுக்கொண்டு அதனுள் அடங்கி ஒடுங்கி எமது ஆற்றல்கள் உணர்வுகள் எல்லாவற்றையும் சிதைத்துக் கொண்டும் இயலாமை எனும் போர்வையை போர்த்திக்கொண்டு சுலபமாக இச் சமூகத்தின் மேல் பழியை போடுகின்றோம். உண்மையில் சமூகம் என்பது என்ன? அதில் நாம் யார்? என்று ஒரு முறை சிந்தித்துப் பார்ப்போமேயானால் உண்மையில் அச் சமூகத்தை உருவாக்கியவர்களே நாம் தானே?

எமது நியாயமான ஆசைகளையோ அல்லது ஆற்றல்களையோ வெளிப்படுத்த முற்படும் போது அது எந்த விதத்திலும் பிறரது மனதை துன்புறுத்தக் கூடியதாக இருக்கக்கூடாது. அவ்வாறு பிறர் மனதை துன்புறுத்தும் உரிமை எமக்கில்லை. அதே நேரம் நாம் ஒவ்வொருவரும் மனிதர்கள் என்ற முறையில் அச்சந்தர்ப்பத்திலும் மனிதம் உள்ளவர்களாக வாழ முயற்சிக்கவேண்டும். இன்று சுதந்திரம் சுதந்திரம் என பேசிக்கொண்டாலும் உண்மையான சுதந்திரம் எது என்பதே பலருக்கு தெரியாமல் உ[illegible] இருந்தும் உணர்வுகள் இருந்தும் ஜடங்களாக வாழ்ந்து நாம் மடிந்து கொண்டிருக்கின்றோம். என்று மனிதன் உண்மையுடன் தனக்காக மட்டுமன்றி [illegible]க்காகவும் வாழ எண்ணுகிறானோ அன்று [illegible]ர் [illegible]மையான மனிதன் [illegible]ன்.

க[illegible] நினைவு[illegible] எட்டி நோக்[illegible]ம் உத்தியிலு[illegible] நிக[illegible]களை எ[illegible]ணி வாழும் நி[illegible]ளிலு[illegible] அ[illegible]ஸ்தி[illegible]கின்றன நம் எதிர்கால க[illegible]வுகள[illegible] லெட்சியங்களும்.


**நாகராஜா துட்சாயினி**
நெளுக்குளம், வவுனியா

**சென்ற மாத தொடர்....**

# மாயமாய் மறைந்த மலேசிய விமானம்:
# மந்திரவாதியும், பேர்முடா முக்கோணப்புதிரும்

விமானத்திலிருந்த யாரோ ஒருவர் திட்டமிட்டு நடத்திய செயல்கள் போல இவை உள்ளன என அறிவித்தார், மலேசியப் பிரதமர் நஜீப் ரசாக்.

இதைத் தொடர்ந்து, நாளொரு தகவலும் பொழுதொரு ஊகங்களுமாக ஊடகங்கள் பரபரப்புக்குத் தீனிபோட்டன. மாயமான விமானத்தின் விமானி ஜகாரி அகமது ஷாவின் வீட்டிலிருந்த கணினி அமைப்பில், சில நாள்களுக்கு முன்பு விமான வெள்ளோட்ட (சிமுலேட்டர்) மென்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. அதில் இந்தியா மற்றும் மாலத்தீவு, இலங்கை, டீகோ கார்சியா தீவுகளில் உள்ள 1000 மீட்டர் நீளம் கொண்ட விமான நிலைய ஓடுபாதைகள் பதிவு செய்யப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. சிமுலேட்டரில் சில முக்கியத் தகவல்கள் அழிக்கப்பட்டுள்ளன. அந்தத் தகவல்களை மீட்டெடுக்க கணினி நிபுணர்களின் உதவி நாடப்பட்டுள்ளது. விமானி ஜகாரி அகமது ஷா மலேசிய எதிர்க்கட்சித் தலைவர் அன்வர் இப்ராகிமின் உறவினர் மற்றும் தீவிர ஆதரவாளர் ஆவார். அண்மையில் அன்வர் இப்ராகிமுக்கு [illegible] ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இதற்குப் பழிவாங்கும் வகையில் விமானத்தை அவர் கடத்தினாரா என்ற கோணத்திலும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது என்றது ஒரு செய்தி.




மலேசிய ராணுவ ராடார்களில் இருந்து தப்பிக்க மலைப் பிரதேசங்களில் விமானம் பறந்திருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று அந்த நாட்டு விமானப் போக்குவரத்துத் துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். மலேசியாவின் வடபகுதி மலைப் பிரதேசங்கள் வழியாக விமானம் பறந்து சென்றிருக்க வாய்ப்பு உள்ளது. அந்தப் பகுதியில் குணங் டகான் (2286 மீட்டர்), குணங் பின்டாங் (1828 மீட்டர்) ஆகிய சிகரங்கள் மட்டுமே உயரமானவை. அந்த இரு சிகரங்களைப் பற்றி நன்கறிந்த விமானியால் 9000 அடி உயரத்தில் அந்த மலைப்பிரதேசத்தில் இரவிலும் விமானத்தைச் செலுத்த முடியும் என்றது மற்றொரு செய்தி.

மாலத்தீவுப் பகுதியில் மர்ம விமானம் பறந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். மார்ச் 8–ஆம் தேதி காலை 6.15 மணி அளவில் ஜம்போ ஜெட் விமானம் மிகவும் தாழ்வாகப் பறந்ததை மாலத்தீவின் குடா [illegible]வுத்து பகுதியைச் சேர்ந்த மக்கள் பார்த்துள்ளனர். எங்கள் தீவில் மிகப் பெரிய விமானம் இவ்வளவு தாழ்வாகப் பறந்ததை நாங்கள் பார்த்தது இல்லை, விமானத்தின் கதவுகள்கூட தெளிவாகத் தெரிந்தன. அதன் சத்தம் காதைக் கிழிப்பதாக இருந்தது. வீடுகளில் தூங்கிக் கொண்டிருந்தவர்கள்கூட விமானத்தின் சத்தத்தைக் கேட்டு வீட்டை விட்டு வெளியே வந்து வேடிக்கை பார்த்தோம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். அந்த மர்ம விமானம் அநேகமாக மாயமான மலேசிய விமானமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. தேதி, நேரம் ஆகியவை பொருத்தமாக இருப்பதால் இதுகுறித்தும் மலேசிய அரசு விசாரணையைத் தொடங்கியுள்ளது என்றது வேறொரு செய்தி.

இதனிடையே மாயமான விமானம் கிட்டத்தட்ட 3 நாடுகளின் ராணுவ ராடார்களிலிருந்து தப்பிப் பறந்துள்ளது. முதலில் 35 ஆயிரம் அடி உயரத்தில் பறந்த அந்த விமானம் ராடாரில் இருந்து தப்ப 5 ஆயிரம் அடி உயரத்தில் மிகவும் தாழ்வாகப் பறந்துள்ளது. ராடார் கண்காணிப்புக் குறைந்த மலைப்பிரதேசங்கள் வழியாகவும் விமானம் பறந்துள்ளது. விமானத்தின் இயக்கம், விமானப் பாதைகள் குறித்து நன்கறிந்தவர்களால் மட்டுமே இவ்வாறு விமானத்தைச் செலுத்த முடியும் என்று. மலேசியப் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என்றது இன்னுமொரு செய்தி.

செயற்கைக் கோள் தகவலை ஆதாரமாக வைத்து லண்டனிலிருந்து வெளியாகும் தி இன்டிபெண்டன்ட் நாளிதழ் வெளியிட்ட தகவலோ வேறு மாதிரியாக இருந்தது. இன்மார்சாட் செயற்கைக் கோளில் விமானத்தின் சிக்னல் பதிவானபோது அந்த விமானம் வானில் பறந்திருக்க வாய்ப்பில்லை. தரையில்தான் இருந்திருக்க வேண்டும் என்று நிபுணர்கள் கணித்துள்ளனர். அதன்படி ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டிய வடகிழக்குப் பாகிஸ்தானில் விமானம் தரையிறங்கி இருக்கக்கூடும். ஆப்கானிஸ்தானில் பாதிக்கும் மேற்பட்ட பகுதிகளும் வடகிழக்குப் பாகிஸ்தான் பகுதிகளும் தலிபான்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. அந்தப் பகுதிகளில் விமானம் தரையிறக்கப்பட்டிருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன என்பது அந்த நாளிதழின் கண்டுபிடிப்பு. மாயமான மலேசிய விமானம் இலங்கையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த இரணைமடு விமானத் தளப்பகுதியில் தரையிறக்கப்பட்டிருக்கலாம் என பிஸினஸ் இன் சைடர் எனும் ஆங்கில இணையதளமும் தன்பங்கிற்கு பரபரப்புத் தகவலை வெளியிட்டது. மாயமான மலேசிய விமானம் காணாமல் போன நான்கு மணி நேரத்தில் பல இடங்களைச் சென்றடைந்திருக்க முடியும். இதில் 2 ஆயிரத்து 530 மைல்கள் வரை பயணம் செய்யத் தேவையான எரிபொருள் விமானத்தில் இருந்துள்ளது. மேலும் இந்த விமானம் இந்தியா, இலங்கை அல்லது பாகிஸ்தான் நோக்கிப் பயணித்திருக்கலாம். அந்தமான் தீவுகளில் பல தீவுகள் மக்கள் குடியேறாத அடர்ந்த காடுகளைக் கொண்டுள்ளன. அங்கு ஒரே ஒரு விமான நிலையம் மட்டுமே உள்ளது. எனவே அப்பகுதியில் தரையிறக்க வாய்ப்பு உள்ளது என அந்த இணையதளம் சந்தேகம் எழுப்பியது. விமானம் தாய்லாந்து முதல் கஜகஸ்தான்

(புதிர் தொடரும்....)

"மாதநிலா" சஞ்சிகையின் அற்புத படைப்புகளில் ஒன்றான

# "அன்புக்கரம்"

பாடசாலை சென்று கற்பதற்கு கற்றல் உபகரணங்கள் வாங்கிக்கொள்ள முடியாமல் உள்ள மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டதே இந்த "அன்புக்கரம்".

மாணவர்களே! நீங்கள் வறுமையின் நிமித்தம் பாடசாலை உபகரணப்பொருட்கள் வாங்கமுடியாமல் கவலைப்படுகின்றீர்களா? கவலையை விடுங்கள் எங்கள் அன்புக்கரம்

**எங்களுடைய வழமையான முகவரிக்கு நேரில் வாருங்கள்.**

**வறுமையின் காரணமாக கல்விகற்க முடியாமல் இருக்கும் அனைத்து மாணவர்களுக்காகவும் உருவாக்கப்பட்டதே இந்த அன்புக்கரம்**

"உங்கள் மூன்றாவது கரம்"

**எதிர்பாருங்கள்**

**எமது சஞ்சிகை ஒவ்வொரு மாதத்தின் முதல் ஐந்து நாட்களுக்குள் வெளிவரும்**

என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்

## ஓகன் பயிற்சி வகுப்புக்கள்

**நன்கு தேர்ச்சி பெற்ற ஆசிரியரினால் பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறுகின்றன**



தொடர்புகளுக்கு...

**077 900 94 91**



# பேஸ்புக்கில் சுட்டதில் பட்டது



நீ நடந்துபோக பாதை இல்லையே
என்று கவலைபடாதே,
நீ நடந்தால் அதுவே ஒரு பாதை.

- *Adolf* ஹிட்லர்.

வாழ்க்கையில் நாம் சந்தித்தவர்களில்....


சிலர் நம்மை ஏமாற்றியிருப்பார்கள்
சிலர் நம்மை சோதித்திருப்பார்கள்
சிலர் நம்மைப் பயன்படுத்தியிருப்பார்கள்
சிலர் நம்மை அவமானப்படுத்தியிருப்பார்கள்
சிலர் நமக்கு பாடம் கற்று கொடுத்திருப்பார்கள்

ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்
அவர்கள் தான் நாம் சிறந்த மனிதர்களாக
மாற முக்கிய காரணமானவர்கள்

புத்தியை மறைக்கும்போது அறிவு வேலை
...மல் போய்விடுகிறது! - கவியரசு கண்ணதாசன்.



பணத்தின்
உண்மையான மதிப்பு
பிறரிடம் கடன் கேட்கும்
போதுதான் புரியும்




"கண் பார்வை அற்றவன்
குருடன் அல்ல
தன் குற்றங்களை உணராதவனே
குருடன்"
-காந்திஜி



by,sasikaanth

# சிந்தனைச் சிதறல் 13

## இம்மாதச் சிதறல்



காசு, பணம், துட்டு, மணி மணி.

வாசகர்களே!
மாதம் ஒவ்வொன்றிலும்
சிந்தனைச் சிதறலாக வரும் உருவப்படத்திற்கு
உங்கள் ஒவ்வொருவரின் சிந்தனைகளும்
பலதிசைகளில் சிதறுகின்றன. அவைகளை
உணர்வுமிக்க பத்துவரிகளுக்குள் எமது
வழமையான முகவரிக்கு எழுதி
அனுப்புங்கள்

## ஜுன் மாதச் சிதறல்



### பணப்பரிசு பெறும் கவிதைகள்

**1**
பத்துமாதம் பக்குவமாய் தன் வயிற்றில்
பாரமின்றி சுமந்தவள் இப்போ
பாரமென்று நினைத்தா உங்களை
பாத்திரம் ஏந்த விட்டாள்....

இ.மரியபிலிப்
கூமாங்குளம், வவுனியா.

**2**
என்ன பாவம் செய்தோமோ
இப்பிறவி எடுப்பதற்கு
பெற்றவரை இழந்து
பெரும்பாடு படுகின்றோம்

R.சிவராணி
தோணிக்கல், வவுனியா.

**3**
உண்ண உணவில்லை
உடுக்க உடையில்லை
கண்ணில் நீருமில்லை
கையேந்தி நிற்கின்றோம்
கரம் தந்து உதவிடுவீர்

T.தவேந்திரன்
வவுனியா

### பாராட்டு பெறும் கவிதைகள்

கையேந்தி நீயெடுக்கும் பிச்சையிலாவது
கல்நெஞ்சங்கள் உருகி
கண்ணீரால் கரைந்து
கரங்களை மாற்றட்டும்
உதவிக்கரங்களாக....

பி.சோபனா
பாரதிபுரம்

பள்ளிக்கூடத்தில் படிப்பதற்காக
அனுமதிக்காய் கெஞ்சும் நேரத்தில்
உங்கள் பிஞ்சுக்கைகளை இங்கே
பசிதீர்ப்பதற்காக பிச்சைக் கேட்டு
பாதைதனில் நீட்டுவதா!

செல்வி.மா.சுபாஜினி
தோணிக்கல்,
வவுனியா

சிந்தனைச் சிதறலுக்கான
பணப்பரிசு தொகை விபரம்
1ம் பரிசு 500/-
2ம் பரிசு 300/-
3ம் பரிசு 200/-

சிந்தனைச் சிதறலுக்கு
பிரதான அனுசரணை:
சர்வதேச மொழித்திறன் விருத்தி நிறுவனம்
ILSDI
French | Deutsch | Italian | Dutch
Korean | Danish | English | Sinhala
Tamil | IELTS | TOEFL | Ket(A1,A2)
இம்மாதம் முதல் இடம் மாற்றம்
No:148, Station Road, Vairavapuliyankulam, Vavuniya.
024 5610154 / 077 3493285

# அறிவுக்கு சவால் 11

குறுக்கெழுத்துப் போட்டி (மாதநிலா குட்டீஸ்களுக்கானது)

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | | 3 | | 2 |
| 5 | ■ | | 7 | |
| | ■ | | | |
| 4 | | | | |
| | ■ | 6 | | |

**இடமிருந்து வலம்**

1.மாதா, பிதா, குரு..........

4.பத்திரிகைகளில் வருவது (குழம்பியுள்ளது)

6.மனித குணங்களில் ஒன்று

**மேலிருந்து கீழ்**

2.உணவிற்கு இது அவசியம்

3.12 மாதங்கள் சேர்ந்தால் வருவது

5.இது நின்று விட்டால் உயிர் போய்விடும்.

7.இவனுடன் உறவுவைக்க யாரும் விரும்பமாட்டார்கள்.

குட்டீஸ்களே! விடைகளை கேள்வி இலக்கத்துடன் சேர்த்து எமக்கு அனுப்பி பரிசில்களை வெல்லுங்கள்

விடைகளை ஒரு வெள்ளைத்தாளில் எழுதி எங்களுக்கு அனுப்பிவையுங்கள். முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளின் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக 300/-, 200/-, 100/- வழங்கப்படும்.

போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற அனைத்து வெற்றியாளர்களும் 1ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எமது தொடர்பிலக்கத்துடன் தொடர்புகொண்டு தங்களுடைய பரிசில்கள் சம்பந்தமான விபரங்களை அறிந்து பெற்றுக்கொள்ளலாம்

போட்டிகளுக்கான விடைகளை மட்டும் எங்களுக்கு அனுப்பி வையுங்கள் பயிற்சிகளை அனுப்பத்தேவையில்லை அவைகள் நீங்கள் செய்து பழக மாத்திரமே

ஜுன் மாதத்திற்கான அறிவுக்கு சவால் போட்டிக்கு ஏராளமான குட்டீஸ்கள் சரியான பதில்களை எழுதி அனுப்பி இருந்தார்கள். அவர்களுக்கு எங்களுடைய வாழ்த்துக்கள். அவற்றிலிருந்து குலுக்கள் மூலம் தெரிவு செய்து பரிசைப் பெறும் 3 குட்டீஸ்கள்.

**ச.பிரதீபன்**
தரம்:4, வ/புளியங்குளம், இந்துக்கல்லூரி. பரசன்குளம், புளியங்குளம், வவுனியா.

**நா.மிலான்**
தரம்:3, 2ம் செங்கல்படை, வேலாண்குளம், வவுனியா.

**மா.டினோ**
தரம்:4, வ/இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, வவுனியா.

**1** ஜுன் மாதத்திற்கான வர்ணம் தீட்டும் போட்டியில் 1ம் இடத்தைப் பெற்று பரிசில்களை வென்ற போட்டியாளர் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடசாலையில் 3 இல் கல்வி கற்கும் **உ.எறின்டீனுஜா** 793, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**2** 2ம் இடத்தைப் பெற்று பரிசில்களை வென்ற போட்டியாளர் வவுனியா இறம்பைக்குளம் பாலர் பாடசாலையில் கல்வி கற்கும் **அ.சஹீர்ஹான்** பூந்தோட்டம், வவுனியா.

**3** 3ம் இடத்தைப் பெற்று பரிசில்களை வென்ற போட்டியாளர் வவுனியா புளியங்குளம் இந்துக்கல்லூரியில் தரம் 4 இல் கல்வி கற்கும் **கைமன் ஹரிஸ்** வவுனியா இறம்பைக்குளம் ம.ம.வித்தியாலயம்.

## மாணவர் அரங்கம்


மாணவச் செல்வங்களே,
'மாணவர் அரங்கம்' என்ற பகுதியில் இணைய விரும்புகின்றீர்களா, அப்படியாயின் தங்களுடைய பெயர், முகவரி, தொ.பே.இல, பாடசாலை, வகுப்பு ஆகியவற்றை ஒரு வெள்ளைத்தாளில் எழுதி தங்களுடைய புகைப்படத்துடன் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்

**மாதநிலா சஞ்சிகையை இலங்கையின் அனைத்து புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்**

# நாடுகளும் உணவுப் பழக்கமும்



அறிவாற்றல் பெறத்தொடங்கிய ஆரம்ப காலத்தில், மனிதர்கள் அனைவரும் மாமிச உண்ணிகளாகவே இருந்தனர். அறிவுபெற்ற மனிதர்கள் காய்கறி மற்றும் பழங்களைக் கண்டு பயந்தனர்.



பச்சையாக இருக்கும் ஒரு காய் சிவப்பாகவோ, பழுப்பு நிறமாகவோ, மஞ்சள் நிறமாகவோ மாறும் போது அதற்கு ஏதோ மந்திரசக்தி இருப்பதாகவும், அதைச் சாப்பிட்டால் சாப்பிடுபவர்களும் தங்களின் நிறம் மாறி




காய்ந்து போவார்கள் என்றும் நினைத்தனர். காலப்போக்கில் மனித உருவத்தைக் கொண்ட குரங்குகள் பழங்களையும், காய்கறிகளையும் சாப்பிடுவதைக் கண்டார்கள். அவற்றிற்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாததைக் கவனித்து,




குரங்குகள் சாப்பிட்டுப் போட்ட எச்சில் பழங்களைச் சாப்பிட்டனர்.

அதன் பிறகு, தானே கனிகளைப் பறித்துச் சாப்பிட ஆரம்பித்தனர். அறிவுவளர்ச்சி அடைந்த பிறகு மாமிசத்துடன் காய்கறிகளையும் சாப்பிடத் தொடங்கினான். இதற்கு பத்தாயிரம் முதல் இருபதாயிரம் ஆண்டுகள் வரை ஆனது. மனிதக் குழு உலகெங்கும் பரவியதும் மனிதர்களின் உணவும் பெரிதும் மாற்றம் கண்டது.



**அமெரிக்கர்கள்:** அமெரிக்க மக்கள் அய்ரோப்பியர்களின் வருகைக்கு முன்பு மேய்ச்சல் நிலங்களில் வாழும் மாடுகளையே தங்களின் உணவுத் தேவைக்காக நம்பி



இருந்தனர். அய்ரோப்பியர்களின் வருகைக்குப்பின் விவசாயமுறையும் நவீனமயமாகிவிட்டபடியால் கோதுமை, சோளம் மற்றும் கேழ்வரகு இவர்களின் உணவுத்தேவையில் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது.

**ஐரோப்பியர்கள்:** ஐரோப்பியர்களின் முக்கிய உணவு மாமிசம் ஆகும். இவர்களின் உணவில் 50 வீதம் மாட்டு இறைச்சி, பன்றி இறைச்சி 10 வீதம் மீன்களும் 40 சதவீதம் காய் மற்றும் தானிய உணவு வகைகளும் இடம்பெறும். ஐரோப்பாவில் குளிர்காலம் கடுமையான குளிராகவும் கோடை மிதமான வெயிலாகவும் இருக்கும். கோதுமை மற்றும் உருளைக்கிழங்கிற்கு உகந்த சூழல் ஆகையால் ரொட்டி உருளைக்கிழங்கு தொடர்பான



உணவுவகைகளும் ஐரோப்பியர்களால் அதிகம் உண்ணப்பட்டு வருகிறது.

**ஆசியர்கள்:** உலகின் மக்கள்தொகையில் 50 வீதம் ஆசியாவில்தான் வாழ்கின்றனர். வெப்பமண்டல தானியப் பயிரான நெல் ஆசியர்களின் உணவில் முதலிடம் பிடிக்கிறது. அதே போல் ஆசியர்களின் உணவில் அசைவ உணவுகளைவிட சைவ உணவே அதிகம் கலந்துள்ளது. இது அதிக உடலுழைப்பைக் கொண்டு இருக்கும் ஆசிய மக்களுக்குச் சரிவிகிதமான உணவாக அமைகிறது.

# மாதநிலா நெஞ்சங்கள்

அன்புடன் மாதநிலா ஆசிரியர் அவர்கட்கு!
எண் என்பதும் எழுத்தென்பதும் மனிதர்களுக்கு கண்கள் போன்றது. எழுத்தென்பது விதை போன்றது பல எழுத்துக்கள் சொல், கவிதை, கட்டுரை போன்ற இன்னொரென்னா வடிவங்களில் மனிதனை மனிதனாக்க வழி வகுக்குறது. எனவே எழுத்துக்கள் விதைகளாகின்றது. நல்ல விதைகளை தூவினால் விதைத்தால் நல்ல மரஞ்செடிபயிர்கள் விளையும். அவ்வாறு நல்லெழுத்து விதைகளை விதைத்திட்ட மாதநிலா குடும்பத்தாருக்கு நன்றிகள்.
தொடர்ந்து நலமாக நிலவி நல்லொளி வழங்கிட வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து நல்லாசிகளும் நல்வாழ்த்துக்களும் கூறுவதுடன் அனைத்துள்ளங்களுக்கும் நல்வாழ்த்துக்களும் நல்லாசிகளும் உரித்தாகுக.

நன்றி

அன்புடன்
**பிரம்மஸ்ரீ இராஜ்மோகனசர்மா**
பொதுச்செயலாளர் அரச கருமமொழிகள்
அமுலாக்கும் செயலணி – வவுனியா

---

மாதநிலா ஆசிரியர் அவர்களுக்கு!
முதலில் நன்றி கலந்த நல்வாழ்த்துக்கள், எமது பிரதேசத்தில் இப்படி ஒரு குறை இருப்பதாக வெகு நாட்களாக நினைத்திருக்கின்றேன். "மாதநிலா" என்ற சஞ்சிகையை வெளிவந்தவுடனே பார்த்ததில் சந்தோஷம் ஏற்பட்டது. இருந்தாலும் வவுனியாவில் எத்தனையோ சஞ்சிகைகள் வந்தும் வராததுமாக காணாமல்போய்விட்டது "மாதநிலா" வும் அப்படித்தான் என்று நினைத்தேன் ஆனால் இற்றைக்கு 21 வது இதழையும் படிக்கும்பொழுது மிகுந்த சந்தோஷம் அடைகின்றேன்.
வாழ்க உங்கள் சேவை, வளர்க எங்கள் "மாதநிலா".
தயவு செய்து குறைகளை திருத்திக்கொள்ளுங்கள். யாதெனில் எழுத்துப்பிழை ஓரிரண்டு இருப்பதாக உணர்கின்றேன்.

மாதநிலா பிரியன்
**வி. விமல்ராஜ்**
3ம் ஒழுங்கை, கோவில்குளம்,
வவுனியா.

**தீய நண்பர்களை விட தனிமையே சுகமானது**
**–நபிகள் நாயகம் (ஸல்)**

## ஆங்கிலச் சொல் தருக,

1. மனிதன் : Man
2. கடவுள் :
3. சோகம் :
4. காசு :
5. சித்திரம் : Art
6. சிவப்பு :
7. சிறுத்தை :
8. மீன் : Fish
9. நாக்கு :
10. நரி : Fox

## இடைவெளியை கீழ் உள்ள சொற்களை வைத்து நிரப்புக

1. பாதையில் பயணிக்கும் பொழுது பாதை ஓரமாக செல்லுங்கள்
2. காலையில் குளிப்பது உடலுக்கும் மனதிற்கும் உற்சாகத்தை கொடுக்கும்
3. எந்தத் தொழில் செய்தாலும் செய்யும் தொழில் தெய்வம்
4. பெற்றோர்களை இறுதிவரை பார்த்துக்கொள்வது பிள்ளைகளின் கடமை
5. சின்னச் சின்ன ஆசை சிறகடிக்கும் ஆசை.. இதுவொரு சினிமாபாடல்.

குளிப்பது, தெய்வம், கடமை, பாதை ஓரமாக, சினிமா பாடல், இறுதிவரை,

**இம்மாத குட்டீஸாக அட்டை படத்தை அலங்கரிப்பவர்**

**ஆனந்தராஜா சஹீர்கான்**
பூந்தோட்டம், வவுனியா.

"இம்மாத குட்டிஸ்" நீங்களா,
அப்படியாயின் உங்களது
வர்ண புகைப்படத்துடன்
பெயர், முகவரி, பாடசாலை,
வகுப்பு போன்ற விபரங்களையும்
எங்களுக்கு
அனுப்பி வையுங்கள்,
தெரிவு செய்யப்படும்
புகைப்படம்
இம்மாத குட்டிஸ்
பகுதியாக அட்டையில்
பிரசுரிக்கப்படும்.
**(தரம் 7 ற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்ற இயலாது)**

## விடுகதைகள்

1) தன் மேனி முழுதும் கண்ணுடையாள் தன்னிடம் சிக்கியபேரைச் சீரழிப்பாள் அவள் யார்?

2) முதலெழுத்து தமிழின் அடுத்த எழுத்து ஐந்தும் ஐந்தும் சேர்ந்தால் ஒரு எண்ணிக்கை மொத்தத்தில் இது வருமுன் எச்சரிக்கைத் தேவை?

3) முதல் இரண்டை இழந்தால் ஒளி இல்லை. அடுத்த இரண்டு இல்லாத கோவிலும் இல்லை, மொத்தத்தில் அழகிய பெயராகவும் இருக்கும் நான் யார்?

4) பாலாற்றின் நடுவே கறுப்பு மீன் தெரியுது அது என்ன?

5) அழகான பெண்ணுக்கு அதிசயமான வியாதி, பாதிநாள் குறைவாள், பாதிநாள் வளர்வாள் அது என்ன?

6) ஆலமரம் தூங்கஅவனியெல்லாம் தூங்க, சீரங்கம் தூங்க, திருப்பாற்கடல் தூங்க, ஒருவன் மட்டும் தூங்கவில்லை அவன் யார்?


7) நடுவழிய ஓய்வுக்காம், கடையிரண்டில் ஏதுமில்லை சொல், மூன்றெழுத்தில் உடுத்தலாம், மொத்தத்தில் பெண்கள் விருப்பம், அது என்ன?

என்ன குட்டீஸ்களே! விடைகளை கண்டுபிடிக்க முடியவில்லையா? 15ம் பக்கம் செல்லுங்கள்

# மூளைச்சாவு அடைந்த வாலிபரின் இதயம்

சென்னை : மூளைச்சாவு அடைந்த மதுராந்தகம் வாலிபரின் இதயம், மும்பையைச் சேர்ந்த பெண்ணுக்கு வெற்றிகரமாக பொறுத்தப்பட்டது. காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகம் பழையனூர் யாதவர் தெருவை சேர்ந்தவர். லோகநாதன் (27). இன்ஜினியரிங் படித்துவிட்டு வேலை தேடி வந்துள்ளார். வீட்டில் பெற்றோருக்கு பாரமாக இருக்கக் கூடாது என்பதற்காக, தனியார் வாகனத்தில் டிரைவராக வேலை பார்த்துள்ளார். இந்நிலையில், கடந்த ஜூன் 11ம் தேதி இரு சக்கர வாகனத்தில் அவர் சென்றபோது எதிரே வந்த கன்டெய்னர் லாரி பயங்கரமாக மோதியது. இதில் லோகநாதன் பலத்த காயமடைந்தார். இதனால் அவர் உடனடியாக செங்கல்பட்டு அரசு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு உயிர் பிழைக்கும் வாய்ப்பு குறைவு என்று மருத்துவர்கள் பரிந்துரைத்ததால், அவர் உடனடியாக சென்னை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு ஜூன் 12ம் தேதி கொண்டு செல்லப்பட்டார். அங்கே அவரது நிலைமை மிகவும் மோசமானது.

மருத்துவர்கள் எவ்வளவோ முயற்சித்தும் அவரை காப்பாற்ற முடியவில்லை. இந்நிலையில் லோகநாதன் மூளையின் செயல்பாடு முற்றிலும் செயல் இழந்துவிட்டது. அதே சமயம், உடம்பில் சுவாசம் மற்றும் மற்ற பாகங்கள் இயங்கின. எனவே, லோகநாதனை நன்றாக பரிசோதித்த மருத்துவர்கள், மருத்துவமுறைப்படி, அவர் மூளைச்சாவு அடைந்துவிட்டார் என்று காலை 6.55 மணிக்கு அறிவித்தனர். இனி அவர் உயிர் பிழைக்கவும் முடியாது என்று தெரிவித்தனர். குறிப்பாக, லோகநாதனின் அம்மா ராஜலட்சுமியை அழைத்த மருத்துவர்கள் இந்த தகவலை தெரிவித்தனர். ராஜலட்சுமி நர்சாக பணியாற்றி வருகிறார். என் மகன் இந்த உலகில் இல்லையென்றாலும் பரவாயில்லை. அவன் உருவில் நான் மற்றவர்களை பார்த்து கொள்கிறேன் என்று கதறி அழுதபடி கூறியுள்ளார். அப்போது அங்கிருந்த மருத்துவர்கள் அவரை தேற்றினர்.






உடனே ராஜலட்சுமி தன் மகனின் இதயம், கண்கள் மற்றும் உடல் உறுப்புகளை தானம் செய்ய விரும்புவதாக மருத்துவர்களிடம் தெரிவித்தார். என் மகன் உயிருடன் இருந்தால் என் குடும்பம் மட்டும்தான் பயன்பெறும். ஆனால், அவனின் உடலை தானம் செய்வதின் மூலம் நிறையபேருக்கு அவர்களின் ஆயுட் காலம் முழுவதும் உபயோகமாக இருக்கும் என்று கூறினார். இதையடுத்து சென்னையில் இதயம் மற்ற உறுப்புகள் கோரி பதிவு செய்தவர்களின் விவரங்களை சேகரித்தனர். அப்போது, மும்பையை சேர்ந்த ஓய்வுபெற்ற மரைன் இன்ஜினியர் ஆஸ்பி பி மினோசெரோஜியன் 21 வயதான ஒரே மகள் ஹவோபி, கடந்த 4 ஆண்டுகளாக இதய கோளாறில் அவதிப்பட்டு வந்தார். இதற்காக இவரது பெற்றோர் பல்வேறு மாநிலங்களில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றும் பலன் அளிக்கவில்லை. இதனால், அவரை அமெரிக்கா கொண்டு செல்ல முடிவு செய்தனர். அமெரிக்க டாக்டர்களை தொடர்பு கொண்டபோது, இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு அமெரிக்காவில் இதய மாற்று சிகிச்சை அளிக்க முடியாத அளவுக்கு நிலைமை உள்ளது என்று கைவிரித்துவிட்டனர்.

ஹவோபிக்கு இதய மாற்று சிகிச்சை அளிக்காவிட்டால் இன்னும் 3 அல்லது 4 மாதங்கள் மட்டுமே உயிருடன் இருப்பார் என்று மருத்துவர்கள் தெரிவித்து விட்டனர். இதனால், ஹவோபி பெற்றோர் அதிர்ச்சி அடைந்தனர். எனினும் மனம் தளராத மினோசெரோஜி தனது மகளை அடையாரில் உள்ள போர்ட்டிஸ் மலர் மருத்துவ மனையில் ஒரு மாதத்திற்கு முன்பு சிகிச்சைக்காக சேர்த்தார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்த விவரங்கள் சென்னை அரசு மருத்துவமனையில் உள்ள லோகநாதனின் அம்மா மற்றும் மருத்துவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும், மினோசெரோஜிக்கும் தெரிவிக்கப்பட்டது. அவர் உடனடியாக லோகநாதனின் பெற்றோரிடம் பேசினார். மருத்துவர்களிடமும் தெரிவித்தார். தன் இறுதி நாளை எண்ணிக் கொண்டிருக்கும் ஹவோபியை தன் மகனின் இதயத்தைக்

கொடுத்து காப்பாற்ற லோகநாதனின் பெற்றோர் கனத்த இதயத்துடன் முடிவு செய்தனர்.
இதைத் தொடர்ந்து சென்னை அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த லோகநாதன் இதயத்தை அடையார் மலர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஹவோபிக்கு பொருத்த அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டது. இதயத்தை ஆபரேஷன் செய்து அகற்றுவது. அதை குறிப்பிட்ட நேரத்தில் மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்ப்பது, அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் போலீஸ் பாதுகாப்பு குறித்து ஆலோசனை நடத்தினர்.
சென்னை அரசு பொது மருத்துவமனையில் மூளைச்சாவு அடைந்த லோகநாதனின் உடலில் இருந்து ஆபரேசன் மூலம் இதயம் உள்பட உடல்பாகங்களை வெட்டி எடுக்க மருத்துவர்கள் குழு ஒன்று தயாராக இருந்தது. அதே நேரத்தில் மலர் மருத்துவமனையில் மற்றொரு மருத்துவர்கள் குழு, இதயம் பொருத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளுடன், லோகநாதனின் இதயத்துக்காக ஆபரேஷன் அரங்கில் தயாராக இருந்தது.

# மும்பை பெண்ணுக்கு பொருத்தப்பட்டது

**இறந்தும் உதவுகிறான்...**
இதய தானம் செய்த லோகநாதனின் தாயார் ராஜலட்சுமி. வந்தவாசி அருகே உள்ள ஓசூர் என்னும் பகுதியில் கிராம சுகாதார நர்சாக உள்ளார். இவர் தனது மகனின் இதயம் அறுவை சிகிச்சை மூலம் எடுத்து ஆம்புலன்ஸ்சில் வைக்கப்பட்டபோது கதறி துடித்தார். அப்போது, கண்ணீர் வடிந்த நிலையில், அவர் கூறியதாவது: எனது ஒரே மகன்தான் லோகநாதன். இன்ஜினியரிங் முடித்துள்ளான். ரயில்வேயில் வேலை செய்ய வேண்டும் என்று ஆர்வமாக இருந்தான். அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டிருந்தான். இந்த நிலையில்தான் கடந்த 11ம் தேதி அருகில் உள்ள கடைக்கு சென்று குளிர்பானம் வாங்க பைக்கில் புறப்பட்டான். அப்போது, கண்டெய்னர் லாரி எமன் உருவத்தில் வந்து எனது மகனின் மேல் மோதி விட்டது. இந்த தகவலை அறிந்து துடிதுடித்து விட்டேன். மகனை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று போராடினேன். ஆனால், அனைத்து முயற்சிகளும் கை மீறி போய் விட்டது. இறுதியில், சாகும் நிலையிலாவது எனது மகன் யாருக்காவது உதவட்டும் என்ற நிலையில்தான் உறுப்பு தானம் செய்ய முடிவு செய்தேன் என்றார்.



**அந்த 13 நிமிடங்கள்...**
காலை 10 மணி...சென்னை அரசு பொது மருத்துவமனையில் இருந்து அடையாருக்கு எப்படி எடுத்து செல்வது என்பது குறித்து மருத்துவர்கள் தீவிரமாக ஆலோசனை நடத்தினர். இதுகுறித்து, சென்னை போலீஸ் கமிஷனர் ஜார்ஜ்க்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர் குறித்த நேரத்தில் இதயத்தை எந்த சிக்கலும் இல்லாமல் எடுத்து செல்ல தேவையான அனைத்து ஒத்துழைப்பும் தருவதாக கூறினார். மேலும், அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்யும்படி போக்குவரத்து போலீஸ் அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார்.

**மாலை 3 மணி...**
சென்னை அரசு பொது மருத்துவமனையில் சரியாக 3 மணிக்கு ஆபரேஷன் அரங்கிற்கு மூளைச்சாவு அடைந்த லோகநாதனின் உடல் கொண்டு செல்லப்பட்டது. அங்கு முதல் கட்டமாக கிட்னி அறுவை சிகிச்சை மூலம் எடுக்கப்பட்டது. பின்னர், அது பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டது. பின்னர், கல்லீரல், கண் ஆகியவை அடுத்து அடுத்து எடுக்கப்பட்டு, மற்றவர்களுக்கு பொருத்தும் பணிகள் தொடங்கின. இறுதியாக, லோகநாதனின் இதயம் ஆபரேஷன் மூலம் அகற்றப்பட்டது. இதயத்தை பிரத்யேகமான குளிர்சாதன பெட்டியில் வைக்கப்பட்டது.

**4 மணி:** இந்நிலையில் சென்னை அரசு பொது மருத்துவமனையில் இருந்து மலர் மருத்துவமனைக்கு வரும் வழிகளில் உள்ள சிக்னல்கள் நிறுத்தப்பட்டது. சாலை மற்றும் தெருக்களின் சந்திப்புகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் முன்பு போலீசார் குவிக்கப்பட்டனர். ஆம்புலன்ஸ் வேகம் தடைபடாமலும், குறுக்கே வராமலும் இருக்க போலீசார் நேரடியாக போக்குவரத்தை சரி செய்யும் பணியில் இறங்கினர். எனினும் போக்குவரத்து நெரிசல் ஏற்படாத வகையில் வாகனங்களை ஒழுங்குபடுத்தினர்.

**6.30 மணி:** மருத்துவமனையில் இருந்து பலத்த பாதுகாப்புடன் மருத்துவர்கள் குழு ஒன்று லோகநாதனின் இதயம் இருந்த பெட்டியுடன் அறுவை சிகிச்சை அரங்கைவிட்டு வெளியே வந்தனர். அங்கு தயாராக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆம்புலன்சில் ஏறினர். அவர்களுக்கு முன்பாக ஒரு போலீஸ் கார் தயாராக இருந்தது. இதையடுத்து போக்குவரத்து முற்றிலும் நிறுத்தப்பட்டது. சாலைகள் அனைத்தும் வேலை நிறுத்தம் செய்வதுபோல சாலைகள் காலியாக இருந்தன.

(17ம் பக்கம் பார்க்க)

## சிறுகதை

# பதில் இல்லை

அம்மா என்று சொல்லிக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தான் முத்துக்குமார். வந்திட்டியாப்பா! நல்லா படிச்சியாடா தம்பி என்று கேட்டுக்கொண்டே அடுப்பை ஊதினாள் தாய் தனலெட்சுமி.

நல்லா சாப்பிட்டியா பத்திரமா போனியான்னு ஒருநாள் கூட கேக்கமாட்டியே! என்றான் முத்துக்குமார்.

டியூசனுக்கு நேரமாகிடுச்சி நீ வேகமா கிளம்பு என்றவுடன் அம்மா போயிட்டு வாரேன் என்று சொல்லிக் கிளம்பிச் சென்றான் முத்துக்குமார்.

போகும் வழியில் தனது நண்பன் சேக்முகமதுவையும் அழைத்துச் சென்றான் வழியில் சேவியரும் சேர்ந்து கொண்டான்.

மூன்று பேரும் டியூசன் வாசலை அடையும்போது, ஆசிரியர் தமிழ்அன்பன் வாங்க... வாங்க என்றார். அன்பான ஆசிரியர் தாழ்த்தப்பட்ட இனத்தை சேர்ந்தவர். பெரியாரால் படிப்பினை பெற்றோம், பெரியாரால் அரசு உத்தியோகம் பெற்றோம் என்ற நன்றி மறவாதவர். பாடத்தைத் துவங்கினர்.

இடைஇடையே பெரியாரின் சிந்தனைகளைச் சொல்லி மாணவர்களை உற்சாகப்படுத்துவார்.

பாடத்தை முடித்துவிட்டு சிறிது நேரம் மாணவர்களிடம் மனிதநேயத்தைப் பற்றியும் இயற்கை வளங்களை பாதுகாப்பது பற்றியும் விவரிப்பது தமிழ் அன்பனின் வழக்கம். டியூசன் முடிந்தது.

மாணவர்கள் மூன்று பேரும் ஆசிரியருக்கு நன்றி சொல்லிவிட்டு சாலையோரமாக நடந்து சென்றனர்.

சிறிது தூரத்தில் சாலையோரமாக ஒருவர் விழுந்து கிடந்தார். மாணவர்கள் ஓடிச்சென்று பார்த்தனர். மண்டையில் பலத்த காயம் ஏற்பட்டு மயக்க நிலையில் கிடந்தவரை சேவியர் முதலில் துணிச்சலுடன் திருப்பிப் பார்த்தான்.

முத்துக்குமார்... நம்ம கணேஷ் அண்ணன்டா என்றான் பதற்றத்துடன். அப்போது இருவர் இரண்டு சக்கர வாகனத்தில் வேகமாக வந்து நின்றனர்.

இருவரும் கணேஷ் வீட்டுக்கு பக்கத்து வீட்டுக்காரர்கள் அய்யப்பன் கோவிலுக்கு மாலை அணிந்து இருந்தார்கள்.



அண்ணே! நம்ம கணேஷ் அண்ணனை யாரோ வண்டிக்காரங்க அடிச்சுப்போட்டுவிட்டு போயிட்டாங்க வாங்க! மருத்துவமனையில் கொண்டுபோய் சேர்க்கலாம் என்றான் முத்துக்குமார்.

தம்பி நாங்க அய்யப்பனுக்கு மாலை போட்டிருக்கோம். இந்த நேரத்தில் அவரை நாங்க தொட்டு தூக்கக்கூடாது என்று சொல்லியபடியே இரண்டு சக்கர வாகனத்தைக் கிளப்பிவிட்டனர்.

அந்தப் பக்கம் எதேச்சையாக ஆட்டோக்காரர் அறிவழகன் வந்துவிட மாணவர்கள் சொன்ன தகவலை அறிந்து அரசு மருத்துவமனைக்கு கணேசைக் கொண்டு சேர்த்தார்கள்.

மருத்துவமனையில் பரிசோதித்த மருத்துவர் உடனடியாக இவருக்கு இரத்தம் செலுத்த வேண்டும் கணேஷ் சட்டையை கழட்டுங்க என்றார்.

முத்துக்குமார் வேகமாக கழட்டும்போது அவருடைய சட்டையில் இருந்த அடையாள அட்டை கீழே விழுந்தது.

அதில் கணேஷின் இரத்தம் O+ என்று எழுதப்பட்டிருந்தது முத்துக்குமார் மருத்துவரிடம் காண்பித்தான். மருத்துவர் O+ இரத்தம் இப்போது இருப்பில் இல்லை. உடனே இந்த O+ குரூப் இரத்தம் உள்ளவர் யாராவது இருந்தால் அழைத்துவாருங்கள் என்று கூறினார்.

உடனே சேக்முகமதுவும் சேவியரும் எங்களுக்கும் இரத்தம் O+ தான் உடனே எடுத்துக்கொள்ளுங்கள் என்றனர்.

ஆனால் அதற்குள் கணேசின் இதயத்டிப்பு நின்றுவிட்டது.

அறிவழகனும் மாணவர்களும் ஆழ்ந்த வருத்தத்துடன் கண்ணீர் சிந்திவிட்டு நடந்த விசயத்தை ஊருக்குள் சென்று உடனே தெரிவித்தார்கள்.

அய்யப்பன் கோவிலுக்கும், ஓம்சக்தி கோவிலுக்கும் மாலை அணிந்து விரதம் மேற்கொண்டவர்கள் கணேசின் இறுதி ஊர்வலத்திற்கு வரவில்லை.

முத்துக்குமார் தன் தாயாரிடம் கேட்டான், அம்மா! ஏன் கணேஷ் அண்ணன் இறந்ததற்கு நீங்கள் போகவில்லை?


அப்பா அய்யப்பன் கோவிலுக்கு மாலை போட்டு இருக்காரு. அதனால நாம போகக்கூடாதுப்பா என்றார்.

அப்படின்னா நாளைக்கு நம்ம வீட்டுல யாராவது இறந்தா அவங்க யாரும் நம்ம வீட்டுக்கு வரமாட்டாங்கதானே என்றான் முத்துக்குமார்.

பதில் சொல்ல முடியாமல் விழிபிதுங்கி நின்றாள் தாய் தனலெட்சுமி.

**விடுகதைக்கான விடைகள்**


1.மீன்வலை
2. ஆபத்து
3.கண்மணி
4.கண்கள்
5.நிலா
6.மூச்சு
7.பட்டு



கார்ல் மார்கஸ்
மூலதனம் என்ற நூலினை எழுத 1586 நூல்களைப் படித்தாராம்.

## எதிர்ச் சொல் தருக.

1. வட்டம் :..............................
2. இலகு :..............................
3. சூரியன் :..............................
4. உயர்வு :..............................
5. கால்பந்து :..............................
6. ஏழை :..............................
7. நிஜம் :..............................
8. நீளம் :..............................
9. சரி :..............................
10. கறுப்பு :..............................



மேலே உள்ள படத்தைப் பார்த்து கீழே உள்ள கட்டத்தில் வரைக

# தட்டச்சு இயந்திரம்

தமிழில் தட்டச்சு செய்ய வேண்டும் என்று சொன்னாலே, பலரும் எனக்குத் தெரியாது, தமிழில் அடிப்பது எளிதுமல்ல என்று சொல்வதுண்டு.

ஆங்கிலத்தில் 26 எழுத்துகளே உள்ளன. தமிழில் மொத்தம் 247 எழுத்துகள் உள்ளன. மேலும், வடமொழியிலிருந்து வந்த சில முக்கியமான எழுத்துகளும் உள்ளன. நினைவில் வைத்துக் கொள்வது சிரமம் என்று பலர் புலம்பக் கேட்டிருப்போம்.

இப்படி நேற்றைய – இன்றைய இளைய தலைமுறையினரை மிரள வைத்த தமிழ்த் தட்டெழுத்துகள் எப்படி உருவாகி வளர்ந்தன?

ஆங்கிலேயர்கள் அரசியல் நிருவாகத்தில் கொடிகட்டிப் பறந்ததற்கும், ஆங்கில மொழிகள் உலக மொழியாக்கப்பட்டதற்கும் பல காரணங்கள் இருப்பினும், ஆங்கிலத் தட்டச்சு இயந்திரத்திற்கும் முக்கியப் பங்கு உண்டு எனலாம்.

ஆங்கில மோகத்தில் திளைத்த காலத்தில், தமிழ்த் தட்டச்சுகளும் உருவாக்கப்பட வேண்டும் என்ற வேட்கைத் தீ சிலருள் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. எனினும் பணம் நிறைய செலவாகும். அப்படியே பணம் செலவு செய்தாலும் தமிழ்த் தட்டச்சு இயந்திரங்கள் விற்பனை ஆகுமா? என்றெல்லாம் சந்தேகங்கள் தோன்றின.


பிரச்சினைகளையெல்லாம் மனதில் கொள்ளாமல், ஈழத்தமிழரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முத்தையா என்பவர் துணிந்து ஈடுபட்டார். இவரே தமிழ்த் தட்டச்சுகளின் தந்தை எனப் போற்றப்படுகிறார்.

சிறுவயதில் பெற்றோரை இழந்த முத்தையா, 1907இல் மலேசியாவுக்குப் புறப்பட்டார். சிங்கப்பூரை அடைந்து, போர்னியாவுக்குப் போக நினைத்தபோது, டானியல் போதகர் என்பவர் அங்கேயே வேலை வாங்கித் தருவதாகக் கூறினார். இரயில்வே துறையில் வேலையும் வாங்கிக் கொடுத்தார்.

சிறிது நாள்களில் வேலையை விட்ட முத்தையா, அய்ல்ஸ்பெரி அண்ட் கார்லாண்ட் என்ற வர்த்தக நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தார். இரண்டு ஆண்டுகள் கழித்து, பதவி உயர்வு பெற்று 1930ஆம் ஆண்டுவரை வேலை செய்தார். வேலையிலிருந்து கொண்டே உயர்தரக் கணக்குப் பதிவு, பொருளாதாரம், அச்சடித்தல், சுருக்கெழுத்து போன்றவற்றைக் கற்றுத் தெரிந்துகொண்டார்.

1913ஆம் ஆண்டு நடைபெற்ற ஸ்லோன் டுப்ளோயன் சுருக்கெழுத்துப் போட்டியில் சர்வதேச வெள்ளிப் பதக்கம் வாங்கினார். மேலும் ஆங்கில, தமிழ் இலக்கியங்கள், கைத்தொழில் நூல்கள், சமய நூல்கள் அனைத்தையும் கற்றுத் தெரிந்துகொண்டார்.

இவர் வேலை செய்த இடத்தின் நிருவாகத் திறமையும், ஒழுக்கமும் இவருக்கு வழிகாட்டியாக அமைந்தன. அங்கே ஒரு தமிழ்த் தட்டச்சு இல்லையே என்ற குறை அவரது மனதை வருத்தியது. முயற்சியில் ஈடுபட்டு, ஓர் அறையில் தனியாக இருந்து 247 எழுத்தின் வடிவங்களை ஒரு பக்கமும், தட்டச்சின் 46 விசைகளை மறுபக்கமும் வைத்துக்கொள்வார். எழுத்துகளை எப்படி விசையில் வைப்பது என்பது பற்றியே சிந்தித்து,



கிடைத்த நேரத்தில் எல்லாம் ஆராய்ச்சி செய்தார்.

தமிழ் நண்பர்களுடன் தொடர்பு கொண்டு தமிழ்த் தட்டச்சு அமைப்பது பற்றிய கருத்துகளை விவாதித்தார். பலவகைகளில் சிந்தித்து ஆராய்ச்சி செய்தபோதும் 72 எழுத்துகளுக்குமேல் குறைக்க முடியவில்லை. இனியும் காலத்தையும் நேரத்தையும் வீணாக்கக் கூடாது என முடிவு செய்து, தட்டச்சை உருவாக்கும் வேலையில் ஈடுபட்டார்.

உருவாக்கிய தமிழ்த் தட்டச்சிற்கு ஸ்டாண்டர்ட் பெரிய தட்டச்சு என்று பெயரிட்டார். தமிழில் 247 எழுத்துகள் இருப்பதால், அனைத்து எழுத்துகளையும் நான்கு வரிசைகளில் உள்ள 46 விசைகளில் அசைக்க முடியாது. எனவே, பல எழுத்துகளுக்குப் பொதுவாக உள்ள சில குறியீடுகளைத் தனித்தனி விசைகளில் அமைக்க வேண்டும். பின்பு, அவற்றைத் தேவையான

எழுத்துகளுடன் சேர்த்து அச்சடிக்கக்கூடிய விசைப்பலகையை அமைக்க வேண்டும். எனவே, இரண்டு விசைகளை அழுத்திய பின்பே அச்சை நகரச் செய்ய முடியும்.

பலமுறை முயற்சி செய்து, இறுதியில் நகரா விசையைக் கண்டுபிடித்தார். இவர் கண்டுபிடித்த நகரா விசையே கடைசிவரை தட்டச்சு உற்பத்தியாளர்களால் பயன்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலத் தட்டச்சுகளின் விசைப் பலகையானது தமிழ்த் தட்டச்சுகளின் விசைப்பலகை அமைப்பிலிருந்து வேறுபட்டு இருந்தது. ஒரு இயந்திரத்தில் பழகியவர் அதேமுறையில் வேறு இயந்திரத்தில் அச்சடிக்க இயலாது.

இந்த வேறுபாட்டை நீக்கி ஒரே அமைப்பு முறையைக் கொண்டுவர சென்னை அரசினர் ஒரு குழுவினை 1955 ஆம் ஆண்டில் அமைத்தனர். இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலும், பிறரது கருத்துகளின் அடிப்படையிலும் விசைப் பலகையமைப்பில் ஒருமைப்பாடு கொண்டுவரப்பட்டது.

எனினும், முத்தையா அவர்கள் வடிவமைத்த முறையிலிருந்து பெரிய மாற்றம் எதுவும் புதிய முறையில் இல்லை. புதிய அமைப்பில் இல்லாத சில சிறப்பம்சங்களைக் கொண்டது இவரது தட்டச்சு அமைப்பு.

இரண்டு கை விரல்களுக்கும் சமமாக வேலை கொடுக்காத தற்போதுள்ள சில தட்டச்சுகளில் உள்ள குறையை அப்போதே நீக்கிய பெருமைக்குரியவர் முத்தையா.

முதல் உலகப் போர் முடிந்ததும், விசைப்பலகையை ஜெர்மனியிலுள்ள சைடல் அன்ட் நளமான் என்ற நிறுவனத்திடம் கொடுத்து அச்சுகளை இறக்குமதி செய்து விற்பனை செய்தார்.

இருப்பினும், தாம் அமைத்த விசைப்பலகையில் சில குறைகள் இருப்பதை உணர்ந்தார். குறைகளைக் களையும் முயற்சியில் ஈடுபட்டார். குறைகளை நீக்க, பிஜோ, அய்டியல் என்ற ஃபோர்ட்டபிள் தட்டச்சுகளை வடிவமைத்தார். இவர் அமைத்ததைப் பின்பற்றியே எரிகோ, ஹால்டர், யுரேனியா போன்ற தட்டச்சுகள் வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது வழக்கத்தில் அதிகம் வந்துவிட்ட கணினிகளில் தமிழில் ஒளியச்சு செய்யும் முறைக்கு இந்த தமிழ்த் தட்டச்சு முறைதான் முன்னோடியாகும்.

(மூளைச்சாவு...)

**6.45 மணி:** இதயம் ஆம்புலன்சில் ஏற்றப்பட்டது குறித்து போக்குவரத்து போலீசாருக்கு தெரிவிக்கப்பட்டது. அவர்கள் அனைத்து சிக்னல்களையும் தற்காலிகமாக நிறுத்தினார். தொடர்ந்து இன்ஸ்பெக்டர் செல்வராஜ் தலைமையிலான போக்குவரத்து போலீஸ் வாகனம் முன்னால் லோகநாதனின் இதயம் உள்ள ஆம்புலன்ஸ் வாகனம் முன்பாக சீறி பாய்ந்து செல்ல ஆரம்பித்தது. போலீஸ் சென்ற பைலட் வாகனத்தை தலைமை காவலர் பாலாஜி என்பவர் ஓட்டினார். இதயம் இருந்த ஆம்புலன்சை வேனை கதிர் என்ற டிரைவர் ஓட்டினார். அரசு மருத்துவமனையில் உள்ள பூந்தமல்லி நெடுஞ்சாலை வழியாக வலது புறம் திரும்பி முத்து சாமி பாலம் வழியாக கொடி மரச்சாலை வழியாக ஆம்புலன்ஸ் புறப்பட்டது. அப்போது, நேரம் 6.47. வளைவான பகுதி என்பதால் டிரைவர் மிகவும் லாவகமாக ஆம்புலன்சை ஓட்டினார்.

**6.49 மணி:** 60 கிலோ மீட்டர் வேகத்திற்கு மேல் செல்ல அவரால் முடியவில்லை. தொடர்ந்து கொடி மரச்சாலை வழியாக போர் நினைவு சின்ன வளைவு வழியாக காமராஜர் சாலைக்கு செல்லும்போது 6.49 மணி ஆனது. மெரினா காமராஜர் சாலை நடுவில் இருபுறமும் வாகனம் நிறுத்தப்பட்டது.

**6.54 மணி:** அடையார் பாலத்தின் கீழ் பகுதியில் யூ டர்ன் அடித்த ஆம்புலன்ஸ் வேன், அடையார் மருத்துவமனைக்குள் சரியாக 13 நிமிடம் 22 விநாடிகளில் நுழைந்தது. அங்கிருந்த எமர்ஜென்சி நுழைவு வாயில் வழியாக சென்றது. அதற்கு முன்னதாக அங்கிருந்த பொதுமக்கள் மற்றும் பணியாளர்கள் அப்புறப்படுத்தப்பட்டனர். மேலும் அடையாறு பகுதியில் இருந்து மெரினா நோக்கி செல்லும் வாகனங்கள் 500 மீட்டர் முன்பே தடுத்து நிறுத்தப்பட்டது.

**6.58மணி:** லிப்டில் மருத்துவர்களின் உதவியுடன் இதயம் எடுத்து செல்லப்பட்டது. அங்கு அறுவை சிகிச்சை அரங்கில் இருந்த மருத்துவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் உடனடியாக, ஹவோபிக்கு இதய அறுவை சிகிச்சையை துவக்கினர். சில மணிநேர ஆபரேஷனுக்கு பிறகு ஹவோபிக்கு லோகநாதனின் இதயம் பொருத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இந்த செய்தியை கேட்ட ஹவோபியின் பெற்றோர் மற்றும் லோகநாதனின் பெற்றோர் கண்ணீர் விட்டு அழுதனர்.

**இது கதையல்ல நிஜம்!**

# பெரிய வீட்டு கமலி

–காதல் தொடர்கதை

"என்னங்க, விசயம் தெரியுங்களா?' இது கோயமுத்தூர் குசும்பு செந்திலிடம்

'என்னங்க?'

'எங்க வீட்டுக்காரர் உங்க மனைவியைக் காதலிச்சாராம்' என்றதும்..

சட்டென முகம் மாறியது எனக்கு தெரியாமல் சொல்லிவிட்டோமோ என்று என் மனைவியும் செந்திலை நோக்க...

'ம்ம் சொல்லுங்க. அப்புறம் என்னாச்சு?' ஏதோ கதை கேட்பது போல சாப்பிட்டுக்கொண்டே செந்தில் கேட்க, குழந்தைகளும் ஆர்வம் பீறிட ஒவ்வொருத்தராய், நடந்ததை கேட்க ஆரம்பித்தார்கள், இல்லை இல்லை நச்சரிக்க ஆரம்பித்தார்கள்.

எனக்கோ தர்ம சங்கடம், வேகமாய் சாப்பிடுவதைப் போல தலை நிமிராமல் இருந்தேன், தலை நிமிருவதைத் தவிர்த்தேன். இது கூச்சமா? குற்றவுணர்ச்சியா? வெட்கமா? தன்னுடைய மனைவியைக் காதலித்தவன் இவன்தான் என செந்தில் என்னை முறைத்துக்கொண்டிருப்பாரோ? இப்படி கூறு கெட்டத்தனமாகவா போட்டு உடைப்பாள் மனைவி? கமலி என்னைப் பற்றி என்ன நினைப்பாள், அவளுடைய குடும்பத்தில் பிரச்சினை ஆகிவிடாதா?

'என்ன அன்பு? நீங்க சொல்லுங்களேன்,நீங்கதானே காதலிச்சீங்க? நீங்க சொன்னாத்தான் அதுல ஒரு உயிர் இருக்கும்' என்றாரே பார்க்கலாம், செந்தில்.

இப்படி ஒரு நிலை வருமென கொஞ்சமும் நான் யோசிக்கவில்லை. ஒரு தலையாய்க் காதலித்த என் முன்னாள் காதலி, அவளுடைய கணவன் அவர்களுடைய இரு வாரிசுகள், என் மனைவி, என் வாரிசுகள் இவர்களுக்கு முன்னால் என் காதலைப் பற்றி சொல்லவேண்டுமாம்? அதுவும் ஒரு சொல்லாத காதல் வேறு. 20 வருடங்களுக்கு முன்னால் பூத்த காதல் இன்னும் என் மனதில் அப்படியே இருக்குமா? சொல்ல நினைத்தால் அதே உணர்வுகளோடு சொல்ல முடியுமா? பல எண்ணங்கள், சிக்னல் இல்லாத 4 ரோட்டில் ஓடும் மோட்டார் பைக்குகளைப் போல எண்ணங்கள், குறுக்கும் நெடுக்குமாக ஓடியது.

கமலி என்னைக் காதலிப்பதாய் அவளது டைரியில் எழுதியிருந்ததை என் மனைவியிடம் மறைத்திருந்தேன்.ஏனெனத் தெரியாமல், தெரிந்தே மறைத்த விசயம் அது.


'அப்பா சொல்லுங்கப்பா' என்றான் என் ஆண் வாரிசு.

சொல்லிவிட வேண்டியதுதான் என நினைத்து நிமிர்ந்த வேளையில் என் மனைவியே சொல்ல ஆரம்பித்தாள். அவளுக்குத் தெரியும், என் நிலைமையைப் பற்றி. இந்த நேரத்தில் அவள்தான் என்னைக் காப்பாற்றினாள், காப்பாற்றவும் முடியும். நான் சொல்ல நினைத்த விசயங்கள், மறந்த விசயங்கள் எல்லாவற்றையும் ஒரு தோரணமாகக் கட்டினாள், பூச்சரம் தொடுப்பதைப் போல தொடுத்தாள், ஒரு தேர்ந்த ஓவியனைப் போல உணர்வுகளை வரைந்தாள். நான் காதலித்ததை விட அவள் சொன்ன பாங்கு என் பழைய காதல் மேலும் மெருகேறியது. அவள் சொன்னதில் ஒரு காதல் இருந்தது, என் காதலையும் சேர்த்து. ஒரு, ஒருதலைக்காதலைக்கூட இப்படிச் சொல்லமுடியுமா என வியந்தேன். என் மனைவியும் நான் காத்திருந்தது வரை, நீட்டி முழக்கி சொல்லிமுடித்தாள்.

அன்றைய நிசப்தம், யாரும் சாப்பிடவில்லை. அவள் சொன்ன கதையின் சோகம் எல்லோரையும் தாக்கியிருந்தது. இந்த நேரத்தில் ஒரு இடைவெளி தேவைப்பட்டது. கை கழுவ எல்லாரும் எழுந்திருக்க ஆரம்பித்தோம். 15 நிமிடம் கழித்து ஏதோ ஒரு காரணத்திற்காக சமையலறை சென்ற போது, கமலி தனித்து, தலை குனிந்தவாறு இருந்தாள். அவள் முதுகு மட்டுமே தெரிந்திருந்ததால் 'என்னங்க, கொஞ்சம் தண்ணி வேண்டுமே' என்ற போது சுதாரித்து சட்டெனத்திரும்பினாள். அவள் கண்களில் கண்ணீரும் ஏதோ ஒரு சந்தோச முடிவின் திருப்தியும் இருந்தது. இருவருமே காதலித்திருக்கிறோம், காதல் ஒன்று சேரவில்லை, காதல் பரிமாற்றமே கொள்ளாத நிலையிலும், இருவரும் காதலித்திருந்தோம் என நினைப்பே எங்கள் கண்களில் தெரிந்தது. அதுவும் ஒரு நொடி, ஒரே நொடி..

(தொடரும்...)

# சித்தமருத்துவமும் மனித வாழ்வும்



இராஜ்மோகன் மனோராஜ்
(யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவ 4ம் வருட மாணவன்)

தற்கால உலகில் மனிதன் பிறக்கும்போதே நோயுடன் பிறக்கும் நிலை அதிகமாக காணப்படுவதுடன் பிறந்தவுடன் இறக்கும்நிலை, நோயாளியாக வாழும் நிலை, வாழ்க்கை முடிவதற்கும் ஏதாவது ஒரு நோய் தான் காரணமாக அமைந்து விடுகிறது. மனிதன் பிறப்பதிலிருந்து வாழ்வது வரை நோயுடன் சேர்ந்து வாழும் தன்மையே அதிகமாகக் காணப்படுகிறது. ஏதாவது ஒரு பிணி எந்த வகையிலாவது மனிதனுக்கு ஆயுட்காலம் முழுவதும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஆகவே மனிதன் நோய்களைக் கண்டு அஞ்சுவதில் பயனில்லை. அஞ்சத்தேவையுமில்லை. கூடியவரை நோயின் தாக்கங்களிலிருந்து தன்னை தற்காத்துக் கொள்வதும் நோய் வந்துவிட்டால் தகுந்த மருத்துவர் மூலம் ஏற்ற மருத்துவ சிகிச்சைகளை நாடுவது தவிர்க்க முடியாதவொரு கடமையாக இருக்கிறது.

தற்காலத்தில் தரமான தாராளமான மருத்துவ மனைகளுக்கோ திறமை வாய்ந்த மருத்துவ நிபுனர்களுக்கோ பஞ்சமில்லை. இப்போதெல்லாம் உடல் நலக்குறைவு என்பது வந்துவிட்டால் குறைந்தபட்சம் ஐநூறு ரூபாயிலிருந்து எத்தனையோ ஆயிரங்களையும் ஏன் லட்சங்களையும் கூட செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்படுகின்றது. விஞ்ஞானம் முன்னேற முன்னேற மருத்துவ கண்டுபிடிப்புக்கள் அதிகமாகி வருகிறது. அதே வேளை மருத்துவச் செலவு குறைவதற்கு பதிலாக அதிகமாகி கொண்டே போகிறது. இதற்கெல்லாம் அவ்வளவு எளிதானதல்ல எனினும் நோய்கள் எவ்வாறு வருகிறது. வருமுன் காப்பது எப்படி? வந்தபின் காப்பது எப்படி? நோய்த்தடுப்பு முயற்சியாக இருந்தாலும் நோய்களுக்கான சிகிச்சை பெறுவதாக இருந்தாலும் தகுந்த மருத்துவர்களையும் நிபுனர்களையும் நாட வேண்டும். எனினும் ஆங்கில மருத்துவத்துறை சில விடயங்களில் முன்னேறியுள்ள போதும் அது தேவையான் தாகவுள்ளபோதும் தகுந்த சித்த ஆயுர்வேத மருத்துவர்களை அணுகி சிகிச்சை பெறுவதும் வருமுன் காப்பதற்கான அனேக வழிமுறைகள் சித்தர்களால் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறப்பட்ட சித்த மருத்துவமுறைகள் மூலம் நோயாளர்கள் ஆவது குறைக்கப்பட முடியும்.

ஏனெனில் சித்த மருத்துவ முறையில் உணவே முதல்மருந்தாகும். உணவு பழக்கவழக்கங்கள் உண்ணும் உணவின் வகை, அவற்றின் மூலம் நோய்களுக்கான அடிப்படை காரணங்களாகும் எனவே நாம் உண்ணும் உணவை எமக்கு மருந்தாக அமைவது ஒரு மருத்துவ முறையாகும். எனவே நாம் எமக்கு ஏற்படும் அல்லது ஏற்பட்ட நோய் என்ன காரணத்தால் ஏற்பட்டிருக்கலாம் என ஓரளவுக்கேனும் தெளிவு ஏற்பட்டிருப்பின் தற்காலிக ஆதார ஆரம்ப சிகிச்சையாக இலேசான சிகிச்சையினை மேற்கொள்ள வாய்ப்பாக இருக்கும். எமது அன்றாட வாழ்வில் மிக கூடுதலாகவும் திடீரெனவும் வருவது தலைவலி, தடிமன், காய்ச்சல் உடனே கடையில் சென்று ஏதோ ஒரு தலைவலி மாத்திரையை வாங்கி உடன் விழுங்கிவிடுவதை எல்லோரும் கூடுதலாக வழக்கமாக கொண்டிருப்பது கண்கூடு.

தலைவலி, அல்லது தடிமல் ஏற்பட பல காரணங்கள் உள்ளது. எல்லா தலைவலிகளுக்கும் ஒரே மாதிரியாக இருக்காது தலைவலி என்பது ஒரு நோயின் அறிகுறி அதனை Cimtom என்பார்கள். அஜீரணத்தால் தலைவலி ஏற்படலாம். கண் கோளாறுகளால் தலைவலி ஏற்படலாம்.

மார்புவலி, இதயநோய் தலைவலிக்கு காரணமாக அமையலாம். இரைப்பையில் ஏற்படும் புண்ணும் மார்பு வலியை ஏற்படுத்தலாம். வாய்வு கோளாறுகள் மார்புவலி ஏற்படலாம். இதேபோல்

(தொடரும்....)

# சினிமா

## ஒரே படத்தில் இணைந்து நடிக்கும் விஜய் சேதுபதி, ஆர்யா, விஷால்



நடிகர் பார்த்திபன் இயக்கத்தில் வித்தியாசமான படத்தின் பெயரோடு உருவாகி இருக்கும் படம் கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்.இப்படத்தில் ஆர்யா, அமலாபால், விஜய் சேதுபதி, விஷால், டாப்ஸி என ஒரு இளம் சினிமா பட்டாளமே நடிக்கின்றனர். சமீபத்தில் தான் இப்படத்தின் ஆடியோ வெளியீட்டு விழா மிகவும் பிரம்மாண்டமாக நடைபெற்று முடிந்தது. கதை இல்லாமல் எப்படி ஒரு படம் என்று குழம்பி இருந்த ரசிகர்களின் குழப்பம் எல்லாம் தீரும் வகையில் படம் இம்மாதம் 4ம் தேதி வெளிவரவுள்ளது. மேலும் இப்படத்தில் இருக்கும் நான்கு பாடல்களுக்கும் தமன், விஜய் ஆண்டனி, சத் மற்றும் ஆல்போன்ஸ் ஜோசப் ஆகிய நான்கு இசையமைப்பாளர்கள் இசையமைத்துள்ளனர்.

## நான் நடிச்சாலே ஹிட்தான்!

**மார்தட்டும் லட்சுமிமேனன்**

பிரபுசாலமன் இயக்கிய கும்கி படத்தில் தமிழுக்கு அறிமுகமானவர் கேரளத்து நடிகை லட்சுமிமேனன். அப்போது ஒன்பதாம் வகுப்பு படித்த பெண் என்றாலும், நல்ல மெச்சூரிட்டியான நடிப்பை கொடுத்தார்.

அவரது ஒவ்வொரு அசைவுகளும் அற்புதமாக இருப்பதாக பிரபுசாலமன் மற்றவர்களிடம் சொன்ன விசயம், சசிகுமாரின் காதுகளையும் எட்டியிருக்கிறது.

அதனால், அப்போது தான் நடிக்கயிருந்த சுந்தரபாண்டியன் படத்துக்கும் லட்சுமிமேனனை புக் பண்ணினார். அந்த படத்தில் அவரது பர்பாமென்ஸ் பேசும்படியாக இருந்ததால் தனது அடுத்த படமான குட்டிப்புலியி லும் அவரையே நடிக்க வைத்தார் சசிகும ார். அதையடுத் து, விஷாலுட ன் பாண்டியநாடு, நான் சிகப்பு



மனிதன், விமலுடன் மஞ்சப்பை என பல படங்கள் லட்சுமிமேனன் நடிப்பில் வெளியாகியுள்ளன.

ஆனால் இந்த படங்கள் அனைத்துமே ஹிட்டாகியுள்ளன. அதனால் அடுத்தபடியாக லட்சுமிமேன்ன நடிப்பில் வெளியாகயிருக்கும் ஜிகர்தண்டா, வசந்தகுமாரன், சிப்பாய் போன்ற படங்கள் ஹிட்டிக்கும் என்று அப்படக்குழுவினர் நம்பிக்கொண்டிருக்கின்றனர்.

இதனால், லட்சுமிமேனன் நடித்தாலே அந்த படம் எந்த காரணம் கொண்டு தயாரிப்பாளர்களின் கையை கடிக்காது என்பது கோலிவுட்டில் செண்டிமெண்டாகி விட்டது.

அதனால் தற்போது தனது தாய்மொழியான மலையாளத்தில் ஒரு படத்தில் நடித்துக்கொண்டிருக்கும் லட்சுமிமேனன், தனது கோலிவுட் செண்டிமெண்டை அங்குள்ள சினிமாக்காரர்களிடம் சொல்லி மார்தட்டி வருகிறாராம்.

அதோடு, நான் நடிச்சாலே ஹிட்தான். அதனால் எனக்கான சம்பளத்தை கிள்ளிக்கொடுக்காமல் அள்ளிக்கொடுங்கள் என்று சொடக் போட்டுக் கேட்கிறாராம் லட்சுமிமேனன்.

## சினிமா

# கூலிங்கிளாஸ் அணியும் ஆண்களை எனக்குப் பிடிக்காது

அனுஷ்கா நடிகையாகி 8 ஆண்டுகளை கடந்து விட்டது. இருப்பினும், இதுவரை அவர் எந்த நடிகர்களுடனும் காதல், கல்யாணம் போன்ற கிசுகிசுக்களில் சிக்கியதில்லை. அந்த அளவுக்கு தனது கேரியர் டேமேஜ் ஆகாத அளவுக்கு இமேஜை இப்போது வரை காத்துக்கொண்டு வருகிறார் அவர்.


இந்த நிலையில், தற்போது தமிழ், தெலுங்கில் தலா இரண்டு படங்களில் பிசியாக நடித்துக்கொண்டிருக்கும் அனுஷ்கா, அடுத்த ஆண்டு ஆரம்பத்திலேயே திருமணம் செய்து கொள்ளும் உறுதியான முடிவில் இருக்கிறார்.

அதனால் அவரது பெற்றோர் வரன் பார்க்கும் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதையடுத்து, தனக்கு எந்த மாதிரியான மாப்பிள்ளை வேண்டும் என்பதை பெற்றோரிடம் வெளிப்படுத்தியுள்ளாராம். அதனால், அனுஷ்காவின் மனசுக்குப்பிடித்தமான அவர் சொன்ன அழகு, குணாதிசயம் கொண்ட வரனை தீவிரமாக தேடிக்கொண்டிருக்கிறார்களாம்.

அப்படி அனுஷ்கா எந்த மாதிரி குவாலிட்டியான மாப்பிள்ளையை விரும்புகிறார் என்று கேட்டபோது, என்னை மட்டுமே நேசிப்பவராக, எனக்காகவே வாழ்பவராக இருக்க வேண்டும்.

அதோடு, மனதில் அவர் எதையும் மறைத்து வைக்காமல் வெளிப்படையாக பேசும் குணம் கொண்டவராக இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் எந்த மாதிரியான குடும்ப சண்டையையும் எளிதில் அறிந்து தீர்த்துக்கொள்ள முடியும்.

மேலும், நான் யாரையும் அவர்களின் கண்களையும், சிரிப்பையும் பார்த்தே அவர்களின் மனதை அறிந்து கொள்வேன். அதனால், யாராவது என்னிடம் கூலிங் கிளாஸ் போட்டுக்கொண்டு பேசினாலே எனக்குப்பிடிக்காது. அதனால், கூலிங் கிளாஸ் போட்டு தன் கண்களை மறைத்துக்கொள்ளாத மாப்பிள்ளையாக இருக்க வேண்டும் எனறும் தான் எதிர்பார்ப்பதாக கூறியுள்ளாராம் அனுஷ்கா.



5

# திவ்யா ஒரு கேள்விக்குறியா?

(குடும்பத் தொடர்...)

செத்திருப்பன் அதனாலதான் அடி உதை வாங்கியே இவனோட வாழ்ந்துகொண்டிருக்கிறன் என்று சொல்லிக் கொண்டே மீண்டும் அழத்தொடங்கினாள்.

யசோதா அவளின் கண்ணீரைத் துடைத்து விடுகிறாள். அவளின் கரங்களுக்கு மட்டும் தான் திவ்வியாவின் கண்ணீரை துடைக்கும் உரிமை இருக்கிறதா? இல்லை அவளுக்கு மட்டும்தான் கண்ணீரை துடைக்கும் கருணை உள்ளம் இருக்கிறதா? திவ்வியா அழாதே உனக்கு நல்லது நடக்கும். காலம் மாறும், கடவுள் உன்னுடன் துணை இருப்பார். எனகூறிக்கொண்டே கையில் வைத்திருந்த உடுப்புப் பார்சலையும் தின்பண்டங்களையும் அருகிலுள்ள மேசையில் வைத்துவிட்டு பிள்ளையைத் தூக்கி முத்தமிடுகிறாள். அன்ரா நீங்கள் எங்கள விட்டிட்டுப் போயிடுவீங்களா? அந்தக் குழந்தை ஏக்கத்துடன் வினவுகிறது. இல்லையம்மா அன்ரா உங்களை விட்டு எங்கையும் போக மாட்டன். உங்களிட்ட வருவன் கூறிக் கொண்டே நடக்கிறாள். அவளின் கண்களிலிருந்து கண்ணிர் வழிகிறது. கண்களைத் துடைத்துக் கொண்டே திவ்வியாவின் நிலமையை நினைக்கிறாள். இவனைப்போன்ற மனிதர்களை தட்டிக்கேட்க இந்த நாட்டில் யாருமே இல்லையா? மாட்டை அடிக்கிற மாதிரி அடிக்கிறானே, இவனும் ஒரு மனிசனா? கல்யாணம் இவனுக்கு ஒரு கேடா? மனதிற்குள் திட்டிக்கொள்கிறாள். திவ்வியாவின் வாழ்க்கை ஒரு கேழ்விக்குறிதானா?

யசோவின் கண்களிலிருந்து மணித்துளிகளாக கண்ணீர் விழுந்துகொண்டிருந்தது. துடைத்துக்கொண்டே வீதியில் இறங்கி நடக்கிறாள், ஆனால் திவ்வியாவின் அழுகுரல் மட்டும் அவளின் காதுகளில் இன்னமும் ஒலித்துக்கொண்டே இருக்கிறது....

–முற்றும்

பிரியநிலா
ஓமந்தை

## அனைவருக்கும் பிடிக்கும் ரம்புட்டான்

ரம்புட்டானின் தாய்நாடு மலேசியா எனக் கருதப்படுகிறது. ஆரம்ப காலங்களில் தெற்காசியாவின் கிழக்கு வலய நாடுகளில் பிரதானமாக பயிர்ச்செய்யப்பட்ட இது தற்போது மத்திய அமெரிக்காவிலும், கப்ரியன் தீவுகளிலும் பயிர்ச்செய்யப்படுகிறது. உலகில் பிரதானமாக ரம்புட்டான உற்பத்தி மேற்கொள்ளப்படும் நாடு தாய்லாந்து ஆகும்.

“ரம்புட்” என்றால் மலாய் மொழியில் “முடி” என்றுப் பொருள் தரும். இப்பழத்தின் மேல் பரப்பு முடியைப் போன்று அமைப்பைக் கொண்டிருப்பதால் அதற்கு இப்பெயர் ஏற்பட்டிருக்கின்றது. ரம்புட்டான் பழம் கிழக்காசியா (சீனா ) மற்றும் தென்கிழக்காசியாவை தாயகமாகக் கொண்டது. ரம்புத்தான் ஆஸ்திரேலியா, நியூ கினி, ஆப்பிரிக்கா, இலங்கை, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் விளைகின்றது.

பழத்தின் விதையைச் சூழ உட்கொள்ளக் கூடிய சாறு நிறைந்த சதைப்பகுதி காணப்படுவதால் அது மக்களிடையே விரும்பப்படும் பயிராக மாறியுள்ளது. ரம்புட்டான் பழம் மஞ்சள் , சிகப்பு என இரண்டு வகைகளில் உண்டு . முள்கள் போன்று இருக்கும் . உள்ளே தோலை உரித்தால் அதற்குள் சதை பற்றுடன் விதையுடன் இருக்கும் அந்த சதையை சாப்பிட வேண்டும். விதையை எறிய வேண்டும் .இந்த பழங்களில் அதிக மருத்துவக் குணங்கள் நிறைந்துள்ளது. தற்போது பழங்களை அதிகம் சாப்பிடாமல் இரசாயனம் கலந்த குளிர்பானங்களை விரும்பி அருந்துகின்றனர். இவை உடலுக்கு பல தீங்குகளை இழைக்கக்கூடியது. அதனால் உடலுக்குத் தேவையான அனைத்து சத்துக்களையும் கொடுக்கும் பழங்களை சாப்பிட்டு வந்தால் நோயின்றி ஆரோக்கியமாக வாழலாம். பயன்கள் : இப்பழம் பனை நுங்கு போன்று இருக்கும். ரம்புத்தான் பழங்களின் சர்க்கரை அளவு பழங்களின் சதையின் ஒவ்வொரு 100 கிராமுக்கும் நீர்ச்சத்து – 82.3 கிராம், புரதம் – 0.46 கிராம், கார்போஹைட்ரேட் – 16.02 கிராம், சர்க்கரை – 2.9 கிராம், நார்சத்து – 0.24 கிராம், கால்சியம் – 10.6 மி.கிராம், பாஸ்பரஸ் – 12.9 மி.கிராம், அஸ்கார்பிக் அமிலம் – 30 மி.கிராம் உள்ளது.

# முயன்றால் முடியும்! 18

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | ■ | 4 | | 5 |
| ■ | | ■ | 6 | 7 | | ■ | |
| 8 | | 9 | ■ | | ■ | 10 | |
| | ■ | 11 | 12 | | 13 | ■ | |
| 14 | | | | ■ | 15 | | ■ |
| | ■ | | ■ | 16 | | ■ | 17 |
| ■ | 18 | ■ | 19 | ■ | 20 | | |
| 21 | | ■ | 22 | | | ■ | |

**இடமிருந்து வலம்**

01) உளவு பார்ப்பவன்
04) தமிழ்ப்பட நடிகை
06) ஒரு கலம் உள்ள உயிரினம் (குழம்பியுள்ளது)
08) நீர்(குழம்புயுள்ளது)
10) நல்லதென்றால் இப்படியும் சொல்லுவார்கள்.
11) இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, உறைப்பு, கசப்பு இவை (குழம்பியுள்ளது)
14) படிப்பறிவில்லாதவன் (குழம்பியுள்ளான்)
15) தென்பகுதியின் துறைமுகம்
16) பிரதம அதிதி நிகழ்த்துவது
20) தோலில் ஏற்படும் நோய் (குழம்பியுள்ளது)
21) தந்திரமுள்ள மிருகம்
22) உண்மை ( குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

02) பாம்பு குடியிருக்கும் இடம் (குழம்பியுள்ளது)
03) நீரில் வாழ்வது ( தலைகீழ்)
04) அரைப்பங்கு(தலைகீழ்)
05) தாஜ்மஹாலை தந்தவர்
07) ஆட்சி அமைக்க தேவையான பெரும்பான்மை (குழம்பியுள்ளது)
08) இந்துக்கள் வழிபடும் பெண்தெய்வம்
09) தன்னை காத்துக்கொள்ளத் தெரியாதவன் (குழம்பியுள்ளான்)
12) துப்பாக்கியினுள் இருப்பது (தலைகீழ்)
13) ஏட்டில் இருக்கும் இது கறிக்கு உதவாது. (குழம்பியுள்லது)
17) சக்தி வாய்ந்த தன்மை
18) நீர் தங்கி உள்ள இடம்
19) இதுவும் ஒரு வகை காற்று(தலைகீழ்)

விடைகளை மேலுள்ள கூப்பனில் எழுதி, கத்தரித்து எங்களுக்கு அனுப்பிவையுங்கள். முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 500/-, 300/-, 200/- வழங்கப்படும்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஒ | ட் | ட | க 2 | ம் | ■ | ■ | 3 ப |
| ■ | 4 வா | யா | டி | ■ | 5 ப | ள் | ளி |
| 6 ந | ■ | ■ | 7 வா | ள் | ■ | ■ | த் |
| ண் | 8 சா | ■ | ள | ■ | 9 ல் | பா | த |
| ப | ம் | ள | ம் | 10 ச | ■ | ■ | ட் |
| ன் | ப | 11 | ■ | 12 ப | 13 க | ண் | டு |
| ■ | ல் | ■ | 14 உ | 15 த | ய | ன் | ■ |
| 16 | ■ | 17 அ | று | ம் | க | பு | ல் |

சென்ற மாதத்திற்கான சரியான பதிலை எழுதியவர்களில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட 3 அதிஷ்டசாலிகள் பணப்பரிசை பெறுகின்றார்கள்

**500/-** பிறேமிளா–425, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

**300/-** பிரியதர்ஷினி பிரகாசம்–பாரதிபுரம், வவுனியா

**200/-** இ.மரியபிலிப்–கூமாங்குளம், வவுனியா.

**முற்றிலும் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப்பெறும் 5 அதிர்ஷ்டசாலிகள்**

த.தவேந்திரன் – வவுனியா.
பா.உஜாங்கன்–மார்க்கண்டு வீதி, முழங்காவில்.
இரா.வித்யாஷினி–41, வெளிக்குளம், வவுனியா
க.ராஜன்–தரம்:10, கிளிநொச்சி மத்தியகல்லூரி, கிளிநொச்சி.
இராமர் வைஸ்ணவி –இல:12, 2ம் குறுக்குத்தெரு, வவுனியா.

அப்பா: இன்னைக்கு லீவ் தானே அப்புறம் என்ன படிக்கிறே?
மகன் : குழந்தை வளர்ப்பது எப்படிங்கிற புக் படிக்கிறேன்.
அப்பா : நீ சின்னப் பையன்தானே அதை ஏன் நீ படிக்கிறே?
மகன் : நீங்க ஒழுங்காக என்னை வளர்க்கிறீங்களானு தெரிஞ்சுக்கத்தான்.



## என் உயிர்ப் பாடல்

படம் : பிளஸ் 2 (2002)
இசை : ஜெய்
பாடலாசிரியர்: பா.விஜய்
பாடியவர் : உன்னிமேனன்




மனசுக்குள் வருவாயா, என் மனசுக்குள் வருவாயா நீ ஒரு முறை சொல்லி விடு
பூங்காற்றாய் நீ வரவே இந்த பூங்கா ஏங்கியது கனவாக நீ வரவே என் இமைகள் தூங்கியது ஆறுதல்கள் தந்தால் என்ன அழுகை வருகிறது

உன் பேரை சொன்னால், உன் பேரை சொன்னால் உள் நெஞ்சில் ஏனோ ஓர் ஆறுதல்
நீ என்னை பார்த்தால், நீ என்னை பார்த்தால் முள்ளுக்குள் கூட பூ மாறுதல்
பட்டாம்பூச்சிக்கு ஒரு விண்மீண் மேலேதான் ஆசை வந்தது
விண்மீண் என்பதோ இந்த பட்டாம்பூச்சிக்கு பார்வை தந்தது
பூங்காற்றாய் நீ வரவே இந்த பூங்கா ஏங்கியது கனவாக நீ வரவே என் இமைகள் தூங்கியது ஆறுதல்கள் தந்தால் என்ன அழுகை வருகிறது

வலியாக நீயும் வந்தாலும் போதும் சுகமாக நானும் வரவேற்கிறேன்
காற்றாக நீயும் வந்தாலே போதும் சந்தோஷமாய் நான் சருகாகிறேன்
எந்த பூவிற்கும் மணம் எங்கே வந்தது உன்னால் வந்தது
எந்தன் நெஞ்சுக்குள் உயிர் எங்கே வந்தது உன்னால் வந்தது...
பூங்காற்றாய் நீ வரவே இந்த பூங்கா ஏங்கியது கனவாக நீ வரவே என் இமைகள் தூங்கியது ஆறுதல்கள் தந்தால் என்ன அழுகை வருகிறது
மனசுக்குள் வருவாயா, என் மனசுக்குள் வருவாயா நீ ஒரு முறை சொல்லி விடு (2)

இப்பாடலின் குரல் இனிமையும் கவிநயமும், கற்பனைச் சுவையும், காதல் ரசமும் கலந்து படைக்கப்பட்டதால் எனக்கு மிகவும் பிடித்துள்ளது.

**பிரியதர்ஷினி பிரகாசம்**
**பாரதிபுரம், வவுனியா**

# உங்கள் ராசிக்கு காதல் உறவுகள் எவ்வகையில் அமையும்

## தனுசு

இவர்கள் காதல் வெற்றி அடையும். காதலில் திறமைசாளியாக இருப்பார். இவர்களது லட்சியம் உயர்ந்ததாக இருக்கும். காதலில் வெற்றி அடைய அதிகமாக கஷ்டப்படுவார். காதலிப்பதிலேயே தனது ஆயுளில் பெரும்பாலான நேரத்தை செலவழிப்பார். ஒரு சமயம் அமைதியாகவும், ஒரு சமயம் ஆக்ரோஷமாகவும் காணப்படுவார். காதல் எண்ணம் அதிகம் இருக்கும். துணையை வெகுவாக விரும்புவார். அவரின்பால் அதிக அன்பு செலுத்துவார். தனுசு ராசிக்காரர்கள் மேஷம் / மிதுனம் ராசிக்காரர்களுடன்
திருமணம் செய்தல் நலம்.
மேஷ ராசிக்காரர்களுடன்
காதல் வயப்படுவர்.



# Face Book ல்
# சிங்கத்திடம் சிக்கியது மான்.

சிமோ – நன்றி எல்லாம் எனக்கு சொல்லாதடி. அவன் பழைய நிஷாந் இல்லை. அவனின் நடத்தையே சரியில்லை கவி.

கவி – ம் சிமோ நினைக்கவே ஏதோ எல்லாம் செய்கின்றது.

சிமோ – கவி நான் அவனிட்ட இருந்து பிரிக்கிறதுக்கு இப்படி சொன்னதா ஏதும் நினைக்காதேங்க. உன் நன்மைக்கு அந்த துரோகிட்ட இருந்து பாதுகாக்க தான் சொன்னனான்.

கவி – Ok நான் தப்பா நினைக்கவில்லை. சிமோ நீ சந்தோஷமா இரு. நான் பிறகு கதைக்கின்றேன்.

சிமோ – Ok கவி Bye

கவி – Bye சிமோ.

சிமோ நிஷாந் என்னும் கயவனை உயிருக்குயிராக காதலிச்சிருக்கின்றாள். அதை புரிந்து கொள்ளாத கயவன் என்னையும் நாசமாக்க பார்க்கிறான் என்று நினைத்து அவனிடம் இருந்து விலக நினைக்கின்றாள். இதற்கிடையில் கவி சிமோவோடு கதைக்கின்றது நிஷாந்திற்கு தெரிய வருகின்றது.

**செல்வநாயகம் கஜந்தினி**
**சாஸ்திரிகூழாங்குளம், வவுனியா.**

கவி சிமோ இருவரின் நட்பையும் பிரிக்க முயற்சி செய்கின்றான். கவியைப் பற்றி சிமோவிடமும் சிமோவைப்பற்றி கவியிடம் மாறி மாறி சொல்கின்றான். இதனால் இருவரும் பகைத்துக் கொள்கின்றார்கள். இதில் நிஷாந் சந்தோஷமும் வெற்றியும் அடைகின்றான். கவி நிஷாந்தை வெறுத்து ஒதுக்குகின்றாள்.

கவி, சிமோ இருவரிடமும் இந்த கயவன் ஒரு கணவன் மனைவியிடம் நடந்து கொள்வது போன்று முகஅட்டையில் உரையாடி இருக்கிறான். இறுதியில் கவியின் முகஅட்டையினை (Face Book) சூறையாடி விட்டான். கவி நிஷாந்தை வெறுத்ததன் காரணமாக நிஷாந் "தன்னிடம் கவியின் ஆபாசப்படங்கள் இருப்பதாகவும் தன்னை விரும்பாதவிடத்து அவற்றை கவியின் முகஅட்டையில் தரவிறக்கம் செய்யப் போவதாகவும் கவியைப் பயமுறுத்துகின்றான்." அவள் யாரிடம் இந்த வேதனையை சொல்வதென்று தெரியாமல் தடுமாறுகின்றாள்.

அவனிடம் Face Book ஐ தரும்படி கெஞ்சுகின்றாள். அழுது புலம்புகின்றாள். இரக்கம் என்பதே சிறிதும் இல்லாத அவன் தரமுடியாது என்றும், தன்னோடு உடலுறவில் இருக்குமாறும் வற்புறுத்துகின்றான். இவ்வளவு உரையாடல் இடம் பெற்றும் கவி அவனை (நிஷாந்தை) நேருக்கு நேர் ஒரு நாளும் சந்திக்கவே இல்லை. தனக்கு வருவது சிறிய பிரச்சினை இல்லை பெரிய ஆபத்து என்பதை உணர்ந்தாள்.

பொறுமையாக இருந்த அவள் எல்லாப் பிரச்சினைகளையும் தன்னுள்ளே மூடி மறைக்கின்றாள். தொடர்ந்தும் அவன் அவளையும் அவள் முகஅட்டையையும் சித்திரவதைப் படுத்துகின்றான். பணம் கேட்டு மிரட்டுகின்றான். கவி பொறுமை இழந்து ஒருநாள் தொலைபேசியில் நிஷாந்திற்கு அழைத்து தன் கோபம் தீரும் வரை பேசி விட்டாள். ஆறு மாதங்கள் கழித்து மீண்டும் அவனிடம் இருந்து அழைப்பு வந்தது.

நிஷாந் – ............... ?

கவி – ஹலோ..... உனக்கென்ன வேணும்? எதற்காக மீண்டும் தொந்தரவு செய்கிறாய்? என் தொலைபேசிக்கு அழைக்காதே, என்னை நிம்மதியாய் வாழ விடு. (என்று பேசினாள்.) அதற்கு

நிஷாந் – எனக்கு சுகமளிக்காத உன் வாழ்க்கை நாசமாகத்தான் போகும். வாழ விடமாட்டன். உன்னை யாரும் திருமணம் செய்யவும் விடமாட்டேன். (என்று மறுபடியும் கூறுகின்றான்.)

கவி நிஷாந்திடம் பேசவிரும்பாமல் அழைப்பை துண்டிக்கின்றாள். அவனோ மீண்டும் அழைக்கின்றான். அழைத்து,

நிஷாந் – கவி நான் வேறொரு பெண்ணைக் காதலிக்கின்றேன்.

கவி – அதனைப்பற்றி எனக்கு ஏன் சொல்கின்றாய்? உன் வாழ்க்கையில பெண்கள் என்றாலே காமவெறி பிடிச்சு அலைகின்றாய். உன்னை பத்து மாதம் சுமந்து

(தொடரும்...)

# மாணவர் அரங்கம்


தயாணி பரமலிங்கம்
மாணவர் இல: 01


சலோமி
மாணவர் இல: 02


சிபியா
மாணவர் இல: 03


பே.பானுயன்
மாணவர் இல: 04


ற.அபிதா
மாணவர் இல: 05


ற.அனோஜினி
மாணவர் இல: 06


கீ.கலையரசி
மாணவர் இல: 07


க.கயலரசி
மாணவர் இல: 08


ஜீ.சான்சியா
மாணவர் இல: 09


ந.டேனுஜன்
மாணவர் இல: 10


உ.கனிமாறன்
மாணவர் இல: 11


உ.கனிநிலவன்
மாணவர் இல: 12


மா.கயலக்ஸி
மாணவர் இல: 13


ந.சாலினி
மாணவர் இல: 14



சி.டனுஸ்கரன்
மாணவர் இல: 15


ர.நிரோஜினி
மாணவர் இல: 16


ச.பிரதீபன்
மாணவர் இல: 17


வீ.சஜானா
மாணவர் இல: 18


ஞா.துஷ்யந்தன்
மாணவர் இல: 19


ந.தனுசன்
மாணவர் இல: 20


க.கஜீவா
மாணவர் இல: 21


ம.விதுசா
மாணவர் இல: 22


ந.நவயதுர்சன்
மாணவர் இல:23


த.பிரியங்கா
மாணவர் இல: 24


ச.மேரிபிரிசதர்சினி
மாணவர் இல:25



த.தனுஸ்ரன்
மாணவர் இல: 26


ச.சஞ்சை
மாணவர் இல: 27


ம.மதுமிதா
மாணவர் இல: 28


ற.ஜஸ்மி
மாணவர் இல: 29


ஜெ.கலைப்பிரியா
மாணவர் இல: 30



## விளையும் பயிர்..

பூச்சிப் பிரியர்

பெற்றோரின் கட்டாயத்திற்காகப் பள்ளி சென்றார். எப்போதும் எதையாவது சிந்தித்துக் கொண்டே இருப்பார். பள்ளி விட்டதும் பட்டாம்பூச்சி , வண்டு, வெட்டுக்கிளி போன்றவற்றைப் பிடித்துப் பேரின்பம் கொள்வார்.

பிடித்த பூச்சிகளை வீட்டிற்குக் கொண்டுவந்து அவை என்ன செய்கின்றன? என்ன சாப்பிடுகின்றன? எப்படிச் சாப்பிடுகின்றன என்று கவனித்துப் பார்ப்பார்.

விதவிதமான பூச்சிகளின் படம் கொண்ட ஒரு புத்தகம் வைத்திருப்பார். அந்தப் புத்தகத்தின் படத்தில் இடம்பெற்றிருக்கும் பெரும்பாலான பூச்சிகளைப் பிடித்துவிட்டார். ஒவ்வொரு பூச்சியைப் பிடித்ததும் புத்தகத்தில் அதன் படம் தேடி, இது என்னால் பிடிக்கப்பட்டது என எழுதி தேதியும் குறித்து வைப்பார்.

ஒரு நாள் ஒரு மரத்தின் பட்டையை உரித்துப் பார்த்தார். அதன் உள்ளே அபூர்வமான இரண்டு பூச்சிகள் இருந்தன. வலது கையில் ஒரு பூச்சியையும் இடது கையில் இன்னொரு பூச்சியையும் பிடித்துக் கொண்டார். அப்போது இன்னொரு பூச்சி கண்ணில் பட்டதும், வலது கையிலிருந்த பூச்சியை வாயில் வைத்துக் கொண்டு மூன்றாவது பூச்சியைப் பிடிக்க முயற்சி செய்தார்.

வாயில் வைத்த பூச்சி தன் கொடுக்கினால் அவரது நாக்கில் ஒருவிதத் திரவத்தை வெளியிட்டது. நாக்கு எரிந்ததும் த்தூ த்தூ என பூச்சியைத் துப்பினார். பூச்சி பறந்து சென்றது.

இப்படியெல்லாம் சிறுவயதில் ஆர்வம் கொண்ட இவர் பிற்காலத்தில் புழு, பூச்சி, தாவரம், குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்ற பல உண்மைகளைக் கண்டுபிடித்து உலகிற்கு எடுத்துச் சொன்ன சார்லஸ் ராபர்ட் டார்வின்.

**சத்தியமா**

**வியந்துதான் போவீங்க!**

**நாம் இறந்த பிறகும் கண்கள் 6 மணிநேரம் பார்க்கும் தன்மையுடையது.**

## இன்றைய இளைஞர் யுவதிகளும் கைப்பேசிக் காதலும்..

இன்று நவீன உலகமானது பல்வேறு வகையிலே நாகரிகமடைந்து விருத்தியடைந்து காணப்படுகிறது. அந்த வகையிலே தகவல் தொழிநுட்பமானது மிகவும் துல்லியமாக வளர்ச்சி பெற்று விட்டது. சிறியவர் முதல் பெரியவர்கள் வரையிலே இது விரிவடைந்து காணப்படுகிறது. எமது நாட்டைப் பொறுத்தவரை ஒரு வீட்டிலே உண்ண உணவோ அல்லது உடுக்க உடையோ இருக்கிறதோ தெரியவில்லை ஆனால் கைப்பேசி ஒன்று காணப்படுகின்றது. இதனை அவர்கள் ஒரு நன்மையாகவே எண்ணுகின்றனர். கைப்பேசியிலே எவ்வளவு நன்மை இருக்கிறதோ அதே மடங்கு தீமையும் இருக்கிறது என்பதை அறிந்து செயற்படுதல் முக்கியமானதொன்றாகும். இளைஞர் யுவதிகளை எடுத்துக் கொண்டால் அவர்களிடம் ஒரு கைப்பேசி இல்லையென்றால் அல்லது ஒரு காதலனோ, காதலியோ இல்லையென்றால் அதனை அவர்கள் அவமானமாக எண்ணுகின்ற சந்தர்ப்பம் அதிகமாகவே காணப்படுகின்றது. நவீன உலகின் வளர்ச்சியினாலும் தொழிநுட்ப வளர்ச்சியினாலும் ஏற்பட்ட தாக்கத்தின் விளைவாகவே கருதப்படுகின்றது.

கைப்பேசியிலே ஏற்படுகின்ற காதலால் எத்தனை உயிர்கள் பறிக்கப்படுகின்றன. என்பது நாம் அனைவரும் அன்றாடம் அறிவிக்கின்ற ஒரு விடயமாகும். இதனை கருத்திற்கொண்டு சிந்தித்து செயற்பட்டு நல்ல ஒரு முன்னேற்றப் பாதையிலே பயணித்து சிகரத்தை அடைவோம்

"முயற்சிப்போம், முன்னேறுவோம்"

கவரிமான்
வவுனியா

**நீ வெற்றிக்காக போராடும்போது**
**வீண் முயற்சி என்று சொல்பவர்கள்**
**நீ வெற்றி பெற்ற பின்**
**விடாமுயற்சி என்பார்கள்**

## கை வண்ணங்கள்

மாதநிலா செல்வங்களே, நீங்கள் வரைந்த ஓவியங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். தொடர்ந்து வரும் இதழ்களில் "உங்கள் கைவண்ணங்கள்" பகுதியில் பிரசுரிக்கப்படும்.



**துஷியந்தன்**
தரம்: 5A,
மன்/புனித/சவேரியார். ஆண்கள் பாடசாலை
மன்னார்.



**பி.மேதுஜன்**
தரம்: 07,
வ/புளியங்குளம், இந்துக்கல்லூரி.

**Job Bank**

வேலைவாய்ப்பு தருணர்களாக இருந்தாலும் சரி வேலைவாய்ப்பை பெறுபவர்களாக இருந்தாலும் சரி எங்களுடன் இணைந்து உங்கள் தேவைகளை நிவர்த்தி செய்வது தான் இந்த JOB BANK இன் சேவை.

### வேலைவாய்ப்பு

- **பதவி வெற்றிடம்**
  கணிதம், விஞ்ஞானம், வரலாறு, சிங்களம், ஆங்கிலம் கற்பிக்கக்கூடிய அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் தேவை.
  **நியூ வெல்டன் கல்லூரி**
  உமா மகேஸ்வரன் வீதி, வவுனியா.
  077 8008950
- முல்லைத்தீவு பிரதான வீதியில் அமைந்துள்ள பிரபல புகைப்படக்கலையகத்திற்கு டிசைனிங் செய்வதற்கு தகுதி வாய்ந்த ஆண், பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றார்கள்.
  0212290025 / 0775298352

**வியாபார நிறுவன உரிமையாளர்களே! உங்களுடைய தொழிலுக்குத் பொருத்தமான பணியாளர்களை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றீர்களா?**

**மாணவ மாணவியர்களே! படித்துவிட்டு உங்களுக்கு விருப்பமான வேலை ஒன்றை கற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளீர்களா?**

**உடன் தொடர்பு கொண்டு எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்**

**எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது!**

அழையுங்கள் **077 900 94 91**

## ஒரே ஒரு SMS வெல்லுங்கள்

## 500 ரூபாய் ரீலோட் பணப்பரிசு



நீங்கள் செய்யவேண்டியது,
மறைந்திருக்கும் இவர் யார்?

இவருடைய பெயர் (இடைவெளி)
உங்களுடைய பெயர், முகவரி
என்பவற்றை Type செய்து 077 9903723
என்ற எண்ணுக்கு SMS செய்யுங்கள்


குறித்த மாதம் முழுவதும் SMS அனுப்பலாம், ஒருவர் ஒரு SMS மாத்திரமே அனுப்பமுடியும், மாதஇறுதியில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் ஒருவருக்கு 500 ரூபாய் பெறுமதியான ரீலோட் பரிசு வழங்கப்படும்

# காகிதத் தட்டு


நீண்ட நாள் கழித்து நவயான்- அப்பாவுடன் அவரது நண்பர் தமிழ்ச் செல்வன் இல்லத்திற்குச் சென்றிருந்தான்




அன்று தமிழ்ச்செல்வன் மகள் யமுனாவுக்குப் பிறந்த நாள். அதற்காகத்தான் நவயானை அவனுடைய அப்பா அழைத்து வந்திருந்தார்.



மகிழ்ச்சிப் பெருக்கு வழிந்து ஓடிய பிறகு அனைவருக்கும் சிற்றுண்டி கொடுக்கப்பட்டது அந்தத் தட்டு பாக்குமரப் பாளையில் செய்யப்பட்டது.



நவயானும் அவனுடைய அப்பாவும் மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்தனர் அப்போது – தன் மனதில் இருந்த ஐயத்தை நவயான் கேட்டான்.




இல்ல- நான் இது வரைக்கும் பார்த்ததே இல்லே எதுக்கப்பா இந்தத் தட்டுல கொடுத் தாங்க?
ம்.... இதப்பத்தி நானே முன்கூட்டியே சொல்லியிருக்கணும். பரவாயில்லை. இப்ப அதிகமா விருந்துகள்ல காகிதத்தட்டு பயன்படுத்துறாங்க. காகிதத் தட்டு எதிலிருந்து செய்றாங்க?
ம்... மரத்திலிருந்து செய்றாங்க
காகிதத் தட்டு அதிகமா செய்யணும்னா அதிக மரத்த வெட்டணும். அதிக மரத்த வெட்டிட்டா மழை வராது. மழை வரலேன்னா விவசாயம் செய்ய முடியாது. விவசாயம் செய்யலேன்னா?
சாப்பிட முடியாது.
ம்.... அதேதான் அதுமட்டுமல்ல சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஓசோன் லேயர்ல ஓட்டை- அதனால மக்களுக்குப்பாதிப்பு இவ்வளவு விசயமும் இதுக்குள்ள இருக்கு இனி நீயும் கூட இதப்பத்தி சிந்திக்கனும்.
அடேங்கப்பா. இதுல இவ்வளவு விசயம் இருக்கா?
அடுத்தநாள் பள்ளியில் ஒரு ஆசிரியருக்கு பணிநிறைவு பிரிவு விழா. அதற்கு அனைவருக்கும் சிற்றூண்டி கொடுப்பது பற்றி வகுப்பாசிரியர் மாணவர்களோடு கலந்து பேசிக் கொண்டிருந்தார். நவயான் சட்டென்று எழுந்து பேசினான்.
சார். மிக்சர் பிஸ்கட் வெச்சுக் குடுக்கிறதுக்கு காகிதத் தட்டுக்குப் பதிலா-பாக்குமரப் பாளை தட்டுல வெச்சுக் குடுக்கலாம் சார்
ஏன்?
சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குத்தான் சார்
வெரிகுட்
முற்றும்

# அனைவருக்கும் ஆங்கிலம் 12

will you
V + will you

V - Verb Stem
V - infinitive
V - Present tense
V - Present participle

V + will you ஆனது ஒரு செயலை செய்வதற்கு வருந்திக் கேட்டுக்கொள்ளுதலை குறிக்கும். அத்துடன் மிகவும் அன்பாகவும், தாழ்வாகவும் கேட்டுக்கொள்ளு தலையும் குறிக்கும்.

Come will you

go will you

eat will you

drink will you

Bring will you

sit will you

**Some commands**

1. Bring it here
   அதை இங்கே கொண்டு வாருங்கள்
2. Bring something to eat
   சாப்பிடுவதற்கு ஏதாவது கொண்டு வாருங்கள்
3. Bring here
   இங்கே கொண்டு வாருங்கள்
4. Bring your book
   உங்களுடைய புத்தகத்தை கொண்டு வாருங்கள்
5. You bring it
   நீங்கள் அதை கொண்டு வாருங்கள்
6. You bring it here
   நீங்கள் அதை இங்கே கொண்டு வாருங்கள்
7. You bring it here, will you

8. Bring it back
   அதை திரும்ப கொண்டு வாருங்கள்

10. Bring it here soon
    அதை விரைவாக இங்கே கொண்டு வாருங்கள்
11. Bring some greavy
    கொஞ்சம் குழம்பு கொண்டு வாருங்கள்
12. Bring my towel
    என்னுடைய துவாய் கொண்டு வாருங்கள்
13. Bring that pen
    அந்த பேனாவை கொண்டு வாருங்கள்
14. Bring that pen, will you

15. Just bring it here
    அதை கொஞ்சம் இங்கே கொண்டுவாருங்கள்
16. bring half a kilo of Sugar and one loaf of bread
    அரைக்கிலோ சீனியும் ஒரு பாணும் கொண்டு வாருங்கள்

Practice it - அதை பயிற்சி செய்
Practice it again - அதை மீண்டும் பயிற்சி செய்
again and again- மீண்டும் மீண்டும்
practice it again and again - அதை மீண்டும் மீண்டும் பயிற்சி செய்

Speak up - சத்தமாக கதைக்கச் சொல்
give up - கைவிடல்
put up - கட்டுதல் (கட்டிடம்)
wake up - நித்திரை இருந்து விழித்தல்

**by: SK**
msuresskumar@yahoo.com


அடுத்த மாதம் சந்திப்போம்-

# கணினி மயம் 7

## -தேடுதலுக்கான விடை

கணனியில் ஒலிக்கும் பீப் ஒலி பலருக்கும் புரியாத ஒன்றாகவே இருந்து வருகிறது. இதன் பயன்பாடானது, கணனியில் தோன்றும் பிரச்சனைகளை குறிக்கும் வண்ணம் ஒலிக்கும். கணனியை ஆன் செய்தவுடன் bios ஆனது booting ஆகும் நேரத்தில் ஹார்டுவேர் பாகங்கள் எல்லாம் சரியாக இருக்கிறதா என சோதிக்கும். அப்படி ஏதாவது ஒரு சில பாகங்கள் சரியில்லை என்றால்

இதன் பயன்பாடானது, கணனியில் தோன்றும் பிரச்சனைகளை குறிக்கும் வண்ணம் ஒலிக்கும். கணனியை ஆன் செய்தவு டன் bios ஆனது booting ஆகும் நேரத்தில் ஹார்டுவேர் பாகங்கள் எல்லாம் சரியாக இருக்கிறதா என சோதிக்கும். அப்படி ஏதாவது ஒரு சில பாகங்கள் சரியில்லை என்றால் உடனே கணினியில் இருந்து பீப் ஒலி ஒலிக்க தொடங்கும்.



அப்படி ஒலிக்கும் ஒலியின் எண்ணிக்கையை வைத்தே நாம் எதில் சிக்கல் இருக்கிறது என கண்டறியலாம்.

1– 2 – 3 முறை பீப் சத்தம்:

ram அல்லது motherboard ல் பிரச்சனைகள் இருப்பதைத் குறிக்கும்

4 முறை பீப் சத்தம்:

டைமரில் தோன்றும் பிரச்சனையை சரி செய்யும் விதமாக ஒலிக்கும்.

5 முறை பீப் சத்தம்:

ப்ராசசரில் சிக்கல் இருப்பதைக் குறிக்கும்.

6 முறை பீப் சத்தம்:

கீ போர்டு, கீ போர்டு கண்ட்ரோலில் தோன்றும் சிக்கலை குறிக்கும் விதமாக ஒலிக்கும்.

7 முறை பீப் சத்தம்:

motherboard இல் உள்ள ஜம்பர்கள் சரியாக உள்ளாதா, இல்லை சரியாக வேளை செய்கிறதா என்பதை உணர்த்தும் விதமாக ஒலிக்கும்.

8 முறை பீப் சத்தம்:

Display சமந்தமான பிரச்சனைகளை குறிக்கும் விதமாக அமையும்.

11 முறை பீப் சத்தம்:

கேச் மெம்மரி சமந்தமான சிக்கல்கள் இந்த பீப் சத்தின் மூலம் தெரிவிக்கப்படும்.

1 தொடர் பீப், மற்றும் 3 குறுகிய பீப்:

மெமரி தொடர்பான பிரச்சனைகள் இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

1 தொடர் பீப், மற்றும் 8 குறுகிய பீப்:

Display இல் தோன்றும் பிரச்சனைகள் இந்த பீப் சத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

1 முறை குறுகிய பீப் சத்தம்:

சாதாரணமான ஒலி மற்றும் உங்கள் கணனி நல்ல விதமாக வேளை செய்வதை குறிக்கும்.

தொடர் மற்றும் குறுகிய பீப் சத்தம்:

கணனி மிகுந்த சிக்கலில் இருப்பதை குறிக்கும்.

1 தொடர் மற்றும் 1 குறுகிய பீப் சத்தம்:

Motherboard–ல் பிரச்சனை இருப்பதைக் குறிக்கும்.

1 தொடர் மற்றும் 2 குறுகிய பீப் சத்தம்:

Video வில் தோன்றும் பிரச்சனைகளை குறிக்கும்

3 முறை தொடர் பீப் சத்தம்:

Video circuit–ல் உள்ள சிக்கலை குறிக்கும் வண்ணம் ஒலிக்கும்.

இப்போது கணனியில் ஒலிக்கும் பீப் சத்ததை வைத்தே உங்கள் கணனியில் உள்ள குறைபாடுகளை நீங்களே தெரிந்து கொள்ளலாம்.


## அணைத்துக்கொண்டு அல்ல அணைத்துவிட்டுப் படுங்கள்

நவீன திறன்பேசிகள், குளிகைகள், கையடக்கக் கணினிகள் இன்று பெருகிப் போயுள்ளன. பகலெல்லாம் கட்டிக் கொண்டும், தூக்கிக் கொண்டும் அலைந்தாலும், இரவிலும் அவற்றை அணைத்தே பலர் உறங்குகின்றனர். படுக்கைக்கு அருகிலேயே வைத்து உறங்கும் பழக்கமும் இருக்கிறது. குறுஞ்செய்திக்காகவோ, அல்லது வேறு ஏதேனும் நினைவுறுத்தலுக்காகவோ அடிக்கடி ஒளியைப் பாய்ச்சும். இதனால் தூக்கம் பாதிக்கப்படும் என்கிறது ஓர் ஆய்வு.

இரவா, பகலா என்று அனிச்சையாக நாம் உணர்வதில் வெளிச்சத்தின் பங்கு முக்கியமானது. பொதுவாகவே, மாலை நேரம் ஆகஆக புறச்சூழலில் சிவப்பு நிறம் அதிகரிக்கிறது. கண்ணின் ஆழப்பகுதியில் இருக்கும் செல்களில் உள்ள மெலனாப்சின் என்ற புரோட்டீன் மீது இந்த சிவப்பு நிறம் விழும்போது, பொழுது போய்விட்டது. படுக்கப் போ என்று அந்த செல்கள், மூளைக்கு உத்தரவிடுகின்றன. ஆக, இரவு நேரம் என்றால் கண்ணில் சிவப்பு நிற ஒளிதான் படவேண்டும்.

இந்த அமைப்பை திறன்பேசிகள் குளறுபடி செய்கின்றன. அவற்றில் இருந்து வெளியேறும் நீல நிற ஒளி தொடர்ந்து கண்ணில் பட்டுக்கொண்டே இருந்தால் இன்னும் இரவு நேரம் வரவில்லை என்ற தவறான தகவலைத்தான் கண் செல்கள், மூளைக்குக் கடத்தும். ஏனென்றால், நீலநிறம் என்பது அதிகாலை நேரத்துக்கானது. தூங்கியது போதும் என்று படுக்கையில் இருந்து நம்மை எழுப்பிவிடுவதற்கானது.

எனவே, தொந்தரவு இல்லாத ஆழ்ந்த உறக்கம் கிடைக்க வேண்டும் என்றால் திறன்பேசிகளையும், குளிகைகளையும் அணைத்துவிட்டுப் படுங்கள். இல்லாவிட்டால் கண்ணில் படாமல் தொலைவிலாவது வைத்துவிட்டுப் படுங்கள் என்கிறார் இதுகுறித்து ஆய்வு நடத்திய அமெரிக்க வேதியியல் சங்கத்தைச் சேர்ந்த பிரையன் ஸோல்டோவ்ஸ்கி.



மதம் மனிதனை
மிருகமாக்கும்!
சாதி மனிதனை
சாக்கடையாக்கும்!!

–தந்தை பெரியார்

## உங்களுக்குத் தெரியுமா?

வெள்ளி, சூரிய குடும்பத்தில் சூரியனிலிருந்து இரண்டாவதாக அமைந்துள்ள ஒரு கோளாகும். இரவு வானத்தில் நிலவுக்கு அடுத்து வெள்ளியே பிரகாசமானது. சூரிய உதயத்துக்கு முன்னும் சூரிய அஸ்தமனத்துக்கு பின்னும் வெள்ளி தன் உச்சப்பிரகாசத்தை அடைகிறது. இதனால் அது காலை நட்சத்திரம் மற்றும் மாலை நட்சத்திரம் என்று அழைக்கப்படுகிறது. சூரிய குடும்பத்திலேயே மிகவும் வெப்பமான வளிமண்டலத்தை கொண்ட கோள் வெள்ளியாகும்.
இது அதிகரித்த பச்சை வீட்டு விளைவால் ஏற்பட்டதாகும். இதன் சூழல் உயிரினங்கள் வாழ முடியாத நிலையை கொண்டுள்ளது. இது புவியை போல கற்கோளத்தை கொண்ட கோளாகும். இதன் திணிவும் ஆரை நீளமும் கிட்டதட்ட புவியினுடையதை ஒத்து போவதால் இக்கோளானது புவியின் தங்கை எனவும் அழைக்கப்படுகிறது. இதன் ஆரம் 12092 கீலோ மீட்டர் நீளத்தை கொண்டது. வெள்ளியின் மேற்பரப்பில் 80 சதவீதம் சமவெளியாய் உள்ளது.

சூரியன் பின்னோளி வீசும் போது இதன் பிரகாசம் 3 ஆக சுருங்குகிறது. இக்கோள் நடுப்பகலிலும் பார்ப்பதற்கு பிரகாசமாக இருப்பதுடன் சூரியனும் கீழ் வானில் இருக்கும் போது எளிதில் காணக்கூடியதாகவும் இருக்கிறது. இதன் சுற்றுப்பாதை சூரியனுக்கும் புவியின் சுற்றுப்பாதைக்கும் நடுவில் இருப்பதால் புவியில் இருந்து பார்க்கும்போது சூரியனின் நிலநடுக்கோட்டில் இருந்து 47 டிகிரி சாய்வு வரை அதிகமாக செல்வது போல் தோற்றம் அளிக்கிறது.


வெள்ளி கோள் பரப்பின் சூழல் தற்போது மனிதன் வாழும் சூழலை பெறவில்லை. ஆனால் வெள்ளி கோள் பரப்பில் இருந்து 50 கிலோ மீட்டர் மேல் உள்ள வளிமண்டலம் மனிதர் வாழ்வதற்கு ஏற்ற அடிப்படை வாயுக்களான நைட்ரஜனை பெற்றுள்ளது.

அதனால் வெள்ளியின் வானில் மனிதர் மிதக்கும் நகரங்களை உருவாக்க வாய்ப்பு உள்ளது. காற்றினும் எடை குறைந்து மிதக்கும் நகரங்களை உருவாக்கி அதில் நிரந்தர குடியேற்றங்களை அமைக்க முடியும்.

# கவிதை மழை

கவிதைக்கு களம் அமைத்து தரும்
கவிதை மழையில் உங்கள் கவிதையும்
நனைந்திடலாம் வழமையான
எங்கள் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

## தாய்



மீண்டும் எனக்கு
ஒரு
ஜனனம் நிகழவேண்டும்
உனக்காக
மட்டும் நான் மகளாக
பிறப்பதற்கு

சு.டிஷாயினி
அரசன்குளம், 1ம் ஒழுங்கை,
ஓமந்தை.

## என்னவனே..

சொர்க்கத்தின் திறவு கோலாய்,
சொக்கவைக்கும்
உன்பாசம் அன்பே உனையன்றி
யாருக்கு வரும்
என்னவனின் அன்பு போல்
தரணியிலே
வேறேது கடவுளிடம்
வேண்டுகிறேன்
மீண்டும் அவன் மனைவியாய்
வாழ்வதற்கு....

ஜெகதீஸ் நிஷிந்தா
ஓமந்தை

## தமிழ் மண்ணே வணக்கம்!

வணக்கம் வணக்கம் தமிழ் மண்ணே!
வணக்கம் வணக்கம் தமிழ் மண்ணே!

மண்ணே எம் தமிழ் மண்ணே!
எம் மானம் காத்த தமிழ் மண்ணே!
கண்ணே எம் தமிழ் மண்ணே!
கருணையில் நிறைந்த தமிழ் மண்ணே!

வந்தோரை வாழவைக்கும் தமிழ் மண்ணே!
வன்னி என்ற பெயர் கொண்ட மண்ணே!
வீரம் கொண்ட தமிழ் மண்ணே!
வீறுநடை போட்ட தமிழ் மண்ணே!

சீருஞ் சிறப்பும் கொண்ட மண்ணே!
செந்தமிழன் வாழுந் தமிழ் மண்ணே!
பொல்லாத போர்களை கண்ட மண்ணே!
பெருந்தமிழ்ப் பண்பும் கொண்ட மண்ணே!


தன்மானம் நிறைந்த தமிழ் மண்ணே!
தன் நிகரில்லாத தமிழ் மண்ணே!
எந்நாளும் எம்மண் தமிழ் மண்தான்!
எம் மூச்சு சொல்வதும் தமிழ் மண்ணே!

கவரிமான்
முள்ளியவளை.



# விளையாட்டுச் சங்கதி

## விஷ்ணு அவதார அட்டைப்பட விவகாரம்: டோனிக்கு கைது வாரண்ட்



இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் டோனியை இந்துக் கடவுள் விஷ்ணுவின் அவதாரமாக சித்தரித்து, அவரது கையில் ஷூ உள்ளிட்ட பல்வேறு பொருட்களை வைத்திருப்பது போல் பிசினஸ் டுடே கடந்த ஆண்டு ஏப்ரல் அட்டைப்படம் வெளியிட்டது. இந்த அட்டைப்படம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இது இந்து மக்களின் மத உணர்வுகளை புண்படுத்துவதாக கூறி ஆந்திர மாநிலம் அனந்தபூரைச் சேர்ந்த விஷ்வ இந்து பரிசத் தலைவர் ஷியாம் சுந்தர் அனந்தபூர் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இது தொடர்பாக விளக்கம் அளிக்க ஆஜராகும்படி டோனிக்கு 3 முறை சம்மன் அனுப்பப்பட்டது. ஆனால், சம்மனை யாரும் பெற்றுக்கொள்ளாததால் திரும்பி வந்தது. இந்நிலையில் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, டோனியை கைது செய்ய வாரண்ட் பிறப்பித்து நீதிபதி உத்தரவிட்டார். மேலும், டோனியை இம்மாதம் (ஜூலை) 16-ம் தேதி ஆஜர்படுத்தும்படி காவல்துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதேபோல் டோனிக்கு எதிராக டெல்லி, புனே மற்றும் சில நகரங்களில் வழக்கு தொடரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## உலகக்கோப்பை கால்பந்தில் வெல்லும் அணிக்கு ரூ.210 கோடி பரிசு



உலகம் முழுவதும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் உலக கோப்பை கால்பந்து போட்டி பிரேசிலில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

ஜூலை 13ந் தேதி வரை இந்த கால்பந்து திருவிழா அங்குள்ள 12 நகரங்களில் நடக்கிறது.

இந்த போட்டியில் மொத்தம் நடப்பு சாம்பியன் ஸ்பெயின், பிரேசில், ஜெர்மனி, அர்ஜென்டினா, இத்தாலி, இங்கிலாந்து, போர்ச்சுக்கல், பிரான்ஸ் போன்ற முன்னணி அணிகள் உள்பட 32 நாடுகள் பங்கேற்கின்றன. அவை 8 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் 4 அணிகள் இடம் பெற்று உள்ளன.

ஒவ்வொரு பிரிவில் உள்ள அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோதுகின்றன.

'லீக்' முடிவில் புள்ளிகள் அடிப்படையில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் 'நாக்அவுட்' சுற்றான 2வது சுற்றுக்கு தகுதி பெறும். அதில் இருந்து கால்இறுதி, அரை இறுதி, இறுதிப்போட்டிக்கு அணிகள் முன்னேறுகின்றன.

உலக கோப்பையை வெல்லும் அணிக்கு ரூ.210 கோடி பரிசு தொகை வழங்கப்படும். கடந்த முறை உலக கோப்பையை வென்ற ஸ்பெயின் அணிக்கு வழங்கப்பட்ட பரிசு தொகையை விட இது 17 சதவீதம் கூடுதலாகும்.

சாம்பியன் பட்டம் பெறும் அணிக்கு 4927 கிராம் எடை கொண்ட தங்க கோப்பையும் வழங்கப்படும்.

2வது இடத்தை பிடிக்கும் அணிக்கு ரூ.150 கோடியும், 3வது இடத்தை பிடிக்கும் நாட்டுக்கு ரூ.132 கோடியும், 4வது இடத்துக்கு ரூ.120 கோடியும் பரிசு தொகையாக வழங்கப்படும்.

கால் இறுதியில் வெளியேறும் 4 அணிகளுக்கு தலா ரூ.84 கோடியும், 2வது சுற்றில் வெளியேறும் 8 அணிகளுக்கு தலா ரூ.54 கோடியும், முதல் சுற்றில் வெளியேறும் 16 அணிகளுக்கு தலா ரூ.48 கோடியும் பரிசாக வழங்கப்படும்.

இந்த போட்டியின் மொத்த பரிசு தொகை ரூ.3456 கோடியாகும். கடந்த உலக கோப்பையில் (2010) வழங்கப்பட்ட பரிசு தொகையில் இருந்து 37 சதவீதம் கூடுதலாகும்.

# සිංහල උගනිමු

# சிங்களம் கற்போம் 12

அன்பார்ந்த வாசகர்களே!
දයාබර පාඨකයිනි,

උපකාරක පද
இடைச்சொற்கள்

## වගේ - போல

අම්මා වගේ දරුවෝ නූල වගේ සාරි
அம்மாவைப் போல பிள்ளைகள், நூலைப்போல சாரிகள்

ඔයත් තිස්ස වගේ දියුණු වෙන්න
நீரும் திஸ்ஸையைப் (பெயர்) போல முன்னேறு

අපේ රටවගේ ලස්සන රටක් තියෙනව ද?
எங்களது நாட்டைப் போன்று வேறு ஒரு நாடு இருக்கின்றதா?

නිමල් වගේ සුනිල් උස නෑ?
நிமல் போன்று சுனில் உயரம் இல்லை.

## හින්දා (නිසා) - என்றபடியால் / ஆனபடியால்

- කළු හින්දා එපාලු
  கறுப்பு என்றபடியால் வேண்டாம்
- උණු හින්දා බොන්න බෑ
  சூடு என்றபடியால் குடிக்கவும் முடியாது
- කැඳ හින්දා විසි කරන්න බෑ
  கஞ்சு என்றபடியால் வீசவும் முடியாது
- පොඩි හින්දා හොඳ යි .
  சிறியது என்றபடியால் நல்லது

## වත් - ஆவது

- අද පන්තියට දහදෙනෙකි වත් එයි
  இன்று வகுப்பிற்கு பத்துபேராவது வருவார்கள்
- ඉරිදාටවත් එන්න
  ஞாயிற்றுக்கிழமைக்காவது வாருங்கள்
- දහයටවත් එන්න බලන්න
  பத்துமணிக்காவது வரப்பாருங்கள்
- කටවල් දෙකක්වත් කන්න
  இரண்டு வாயாவது சாப்பிடுங்கள்

## හරි - ஆவது

- රෑට පාන් හරි පිට්ටු හරි කනවා
  இரவிற்கு பாண் அல்லது பிட்டு ஆவது சாப்பிடுவேன்
- අද හරි හෙට හරි එන්නම්
  இன்று அல்லது நாளை ஆவது வரப்பாருங்கள்
- තුනට හරි එන්න බලන්න
  மூன்று மணிக்காவது வரப்பாருங்கள்
- සුදු හරි කළු හරි ගේන්න
  வெள்ளை நிறம் ஆவது அல்லது கறுப்பு நிறமாவது கொண்டுவாருங்கள்

## කං (තුරු) - (வரை / வரையும்)

- මම ඉන්න කං උදව් කරනවා
  நான் இருக்கும் வரை உதவி செய்வேன்
- ගෙදර රණ්ඩුව බත ඉදෙන කං විතරයි
  வீட்டுச்சண்டை சோறு அவியும் வரை மட்டுமே
- ඔයා එනකං මෙයා නිදි
  நீங்கள் வரும் வரை இவர் நித்திரையில் இருந்தால்
- සේරම ඉන්න කං කියයි
  எல்லாமே இருக்கும் வரை சொல்வீர்கள்

## ටික - எல்லாம் / எல்லோரும்

- අපි ටික යමු
  நாங்கள் எல்லோரும் போவோம்
- වැඩ ටික ඉවර කරමු
  வேலைகளை எல்லாம் முடிப்போம்
- බිත්ති ටික ලස්සන යි
  சுவர்கள் எல்லாம் வடிவாக இருக்கின்றது.
- බල්ලෝ ටික ගිහිල්ලා

මතු සම්බන්ධයි
தொடரும்

**பி.வி.செல்வராஜ்**
விரிவுரையாளர் (ஓய்வுபெற்ற) தேசிய கல்வியியற் கல்லூரி
පී.වි.සෙල්වරාජ්
කථිකාචාර්ය (විශ්‍රාමික)

# 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்களுக்கான வினாத்தொகுப்பு

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம்-5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சையின் வினாத்தாள் 1 இற்கான மாதிரி வினாக்கள்

ஆசிரியர்: என்.எஸ்.தீபன் B.A, PG Dip in Edu, Dip in Teach
வ/பூந்தோட்டம் ம.வித்தியாலயம்



**✵ சில பிராதன நகரங்களுக்கிடையிலான தூரம் கிழே Km இல் தரப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை இனங்காண்க.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலி |
| | | | | | கொழும்பு | 115 |
| | | | | கண்டி | 115 | 230 |
| | | | யாழ்ப் பாணம் | 318 | 394 | 509 |
| | | அம்பாந் தோட்டை | 542 | 243 | 237 | 122 |
| | மட்டக்களப்பு | 259 | 376 | 186 | 286 | 397 |
| புத்தளம் | 269 | 328 | 267 | 128 | 131 | 245 |

25. மட்டக்களப்பில் இருந்து கொழும்பிற்கு உள்ள தூரம் யாது?

1. 259 Km 2. 115 Km 3. 542 Km 4. 286 Km


26. 237Km தூரம் காட்டப்பட்டுவது எந் நகரங்களுக்கு இடையிலாகும்?

1. அம்பாந்தோட்டை– கொழும்பு 2. கொழும்பு –காலி 3. புத்தளம்– கொழும்பு 4. அம்பாந்தோட்டை– காலி

27. விழா முற்றம் ஒன்றில் இரண்டு தோரணங்களுக்கு இடையில் ஒரு மாவிலை கட்டப்பட்டது எனின் மொத்தம் 58 தோரணங்கள் கட்டப்பட்டிருந்தால் அங்கு எத்தனை மாவிலைகள் கட்டப்பட்டிருக்கும்?

1. 18 2. 57 3. 58 4. 29

28.



ரூபா 5000 பணத்தாளில் காணப்படும் இப் பறைவையின் பெயர் யாது?

1. இலங்கை சின்னக்கிளி 2. நீலவெட்டிவாற்குருவி
3. மஞ்சள் செவிக் கொண்டைக் குருவி 4. செரண்டிப் செவி ஆந்தை

29. கீழே A தராசின் நிறைகளும் சமனாகக் காணப்படுகின்றது. அவ்வகையில் B தராசின் இடது பக்கத்தில் வைக்கப்பட வேண்டிய நிறைக்கு சமனான உருவை தெரிவு செய்து வரைக?





1. △ △△□ 2. △ △△ △ 3. ○○○□ 4. △ △ □□

30. சாந்தன் "விகடகவி" என்பதை 12321 எனவும் விடம் என்பதை 134 எனவும் குறியீடாக எழுதுவான். அவன் கடகம் என்பதை எவ்வாறு குறியீட்டில் எழுதுவான்?

1. 2234 2. 2324 3. 1234 4. 2321

31.




இவ்வுருவில் உள்ள முக்கோணங்களின் எண்ணிக்கை யாது?

1. 4 2. 5 3. 10 4. 12

# ஆண் குரலுக்கும் பெண் குரலுக்கும் வித்தியாசம் இருப்பது ஏன்? நாம் எவ்வாறு பேசுகிறோம்?


எல்லோருக்கும் வணக்கம், இயற்கையின் படைப்பில் ஒரு மனிதனின் குரல், இன்னொரு மனிதனின் குரலைப்போல இருப்பதில்லை என்பது ஒரு ஆச்சிரியமான விஷயம் தானே நண்பர்களே. உதாரணத்திற்கு நம்மை சுற்றியுள்ள மனிதர்களை எடுத்துக்கொள்வோம் யாருடைய குரலாவது இன்னொருவரின் குரலோடு 100% பொருந்துகிறதா என்று பார்த்தோமானால் நிச்சயமாக இல்லை என்று தான் கூற வேண்டும், இன்னும் சொல்லப்போனால் குரலின் வழியே குறிப்பிட்ட மனிதனை நம்மால் அடையாளம் காணமுடியும் என்பதுதான் உண்மை.

சரி இது ஒரு பக்கம் இருக்கட்டும் பொதுவாக ஒரு குரலை கேட்டவுடன் அந்த குரலுக்கு சொந்தக்காரர் ஆணா அல்லது பெண்ணா என்று நம்மால் இலகுவா




க கூறிவிட முடிகிறதுதானே, எப்படி நம்மால் கண்டறிந்துகொள்ள முடிகிறது என்றால், ஆண்களின் குரல் பெண்களின் குரலைக்காட்டிலும் சற்று தடிமனாகவும் கொஞ்சம் கரகரப்பாகவும் இருப்பதால் தான். அதேவேளையில் பெண்களின் குரலை எடுத்துக்கொண்டோமானால் அவர்களின் குரல் மென்மையாகவும் (ஏழகவ) இனிமையாகவும் இருக்கும் அந்த மென்மைதான் ஆண்களின் குரலிலிருந்து பெண்களின் குரலை முற்றிலும் வேறுபடுத்திக் காட்டுவதற்குறிய முக்கிய காரணி ஆகும்.இதில் கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால் குழந்தைகள் வளர வளரத்தான் குரலில் ஆண் பெண் என்ற வித்தியாசம் தெரிய ஆரம்பிக்கும், பிறந்து மூன்று நான்கு வயது வரையிலான குழந்தைகளிடம் இந்த குரல் வித்தியாசத்தை நம்மால் அதிகம் உணர்ந்து கொள்ள முடியாது. இதற்க்குறிய காரணத்தை பற்றி தெரிந்து கொள்வதற்கு முன்பு முதலில் நாம் எப்படி பேசுகிறோம் என்பதை பற்றி தெரிந்துகொள்வோம் வாருங்கள்.


நாம் எப்படி பேசுகிறோம் என்பது பற்றி விளக்கமாக கூறினால் இந்த பதிவு நாம் மேல்நிலைப்பள்ளியில் பயின்ற விலங்கியல் பாட பிரிவை நினைவு கூர்ந்துவிடும் அபாயம் இருப்பதால் என்னால் இயன்றவரை நாம் எப்படி பேசுகிறோம் என்பதை சுருக்கமாக இங்கே தருகிறேன். மனிதர்களின் தொண்டைப்பகுதியில் குறிப்பாக குரல்வளையில் கிடைமட்டமாக அமைந்து இருக்கும் ஒரு ஜோடி தசைமடிப்புகள் தான் மனிதன் பேசுவதில் முக்கிய பங்கு




வகிக்கிறது என்று சொன்னால் மிகையில்லை. குரல்நாண்கள் (Vocal Cords)என்ற பெயரில் அழைக்கப்படும் இந்த தசைமடிப்புகள் நாம் மூச்சை உள்ளிழுக்கும் போது தளர்ந்த நிலையிலும், நாம் பேச முயற்சிக்கும் போது வீணையில் இழுத்துக் கட்டப்பட்டிருக்கும் நரம்பைப் போல விறைப்பான (Temper) நிலையிலும் இருக்கும். நாம் மூச்சை உள்ளிழுக்கும் போது நுரையீரலை சென்றடையும் காற்று நாம் பேச முயற்சிக்கும் போது திரும்பி வந்து விறைப்பாக நிற்கும் குரல் நாண்களின் மீது குறிப்பிட்ட அழுத்தத்தில் மோதி குரல்நாண்களை அதிரச் செய்து சப்தத்தை உண்டாக்குகிறது. வீணையில் இழுத்துக்கட்டப்பட்ட நரம்புகளை விரல்களால் மீட்டும் போது எப்படி சப்தம் உண்டாகிறதோ அதுபோலவே விறைப்பாக நிற்கும் குரல் நாண்களின் மீது அழுத்தப்பட்ட காற்று வந்து மோதும்போதும் சப்தம் உண்டாகிறது. சாதாரணமாக குரல்நாண் வளர்ந்த ஆணில் 17.5mm முதல் 25mm வரையிலும், வளர்ந்த பெண்ணில் 12.5mm / 17.5mm

தொடரும்...

வர்ணம் தீட்டி பரிசுகளை வெல்லுங்கள்



குறிப்பு: 5ம் ஆண்டுக்கு உட்பட்ட மாணவர்களின் ஆக்கங்கள் மட்டுமே போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படும்

உங்கள் ஆக்கங்களை 25.07.2014 க்கு முன் கிடைக்குமாறு எமது வழமையான முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

தெரிவு செய்யப்படும்
3 வர்ணத்திற்கு பாடசாலை
உபகரணப் பொருட்கள்
பரிசாக வழங்கப்படும்

பெயர் : ..............................

முகவரி : ..............................

தரம் : ..............................

தொ.பே.இல : ..............................

பாடசாலை : ..............................

வ.ஆசிரியர் ஒப்பம் : ..............................


வர்ணம் தீட்டி பரிசுகளை வெல்லுங்கள் போட்டிக்கு பிரதான அனுசரணையாளர்

கையடக்கத் தொலைபேசிகளின் ராஜன்

**Ke.Pe.L**

*Video Vision & Mobile*

இல:34, சந்தை சுற்றுவட்ட வீதி,
வவுனியா.
077 6362555, 077 0565384
077 7577080

# இம்மாத இராசிபலன்

**மேஷம்:** எந்தவொரு விசயத்தையும் சீர்படுத்திக் கொள்ள நினைப்பீர்கள். மனதில் ஒருவிதமான துணிச்சல் இருக்கும். அரசு விசயங்களில் ஓரளவு சகாயங்களைப் பெறலாம். தனக்கு கீழ் உள்ளவர்களை உத்தியோகம் ஆகட்டும், தொழில்கள் ஆகட்டும் தட்டிக் கொடுத்து வேலை வாங்கவும் சுபகாரியங்கள் சுணக்கமே புதிய முதலீடுகளில் அபிவிருத்தி கூடாது. இருப்பதைக் கொண்டு எதையும் இக்காலம் செய்து வந்தால் போதுமானதே. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**ரிஷபம்:** தெய்வ நேர்த்திக் கடன்க் எதுவும் இப்பின் அதை உடனே செய்து கொள்ளவும். சில சுக குறைகளும் சரீர பலவீனங்களும் இருக்கும். பங்காளி தொடர்பால் பயன் இருக்காது. எந்தவொரு காரியமானாலும் பிறரிடம் விடாமல் தானே முன் நின்று செய்வது நல்லது. அதிக அலைச்சல், பயணங்கள் உண்டு வியாபாரம், பணிகள் பணப் பரிமாற்றம், முகவர்கள் இவற்றில் அதிக கவனம் தேவை. இழப்பு இடையூறு உண்டு.

**மிதுனம்:** உங்களை விட்டுச் சென்றவர்கள் உங்களை நாடி விடுவார்கள். உத்தியோகம் தொழில்களில் உயர்வு இருக்கிறது. ஸ்திரமான தொழில் நிமித்தமான தொலைதூர பயணங்கள் இருக்கும். சொந்தம், பழைய பந்தங்கள் மூலமாக நல்ல தகவல்கள் வரும். ஆடை, அணிகலன்கள் வாங்கி சேகரிப்பீர்கள் அரசு துறைகளிலும் ஆதாயம் கிடைக்கும். நீங்கள் கேட்ட இடத்தில் இருந்து பணம் கிடைக்கும். நீர், உணவு, உணவகம், உருகும் பொருட்கள், காப்பகம், தாணியம், சரீரம் இதன் ஜீவனங்கள் சாதகமே

**கடகம்:** கணவன் மனைவிக்குள் சரியான கருத்து வேறுபாடு பிரிவுகள் கூட வரலாம். மனம் விட்டு பேசி எதையும் தீர்த்துக்கொள்வது நல்லது. அக்கம் பக்கம் பிரச்சனைகளை எல்லாம் ஒரு பொருட்டாக எடுத்துக்கொள் வேண்டாம். செய்யும் பணிகளில் மிகவும் கவனமாக இருக்கவும். புதிய விசயம் தொடர்பு, ஒப்பந்தம் தூரப் பயணத்தை தள்ளிப்போடவும்.

**சிம்மம்:** காதல் சமாச்சாரங்கள் கூட கை கூடும். வாகனம் சில தொழில் கூடத்தை பராமரிப்பு வேலையாக பார்த்துக்கொள்வீர்கள். பலவித பயணம் உடையதாக இருக்கும். ஆண்களுக்கு பெண்களின் உதவிகள் பலவகையில் கை கொடுக்கும். கடன் போன்ற அமைப்பில் கூட சில சொத்தோ, வாகனமோ வாங்க நேரும். புத்திர பிராப்தி அமையும். எந்திரம், எலெக்ரானிக்ஸ், டெக்ரைல்ஸ், மீடியா, மிகைப்படுத்தும் தொழில்களால் ஆதாயமே.

**கன்னி:** சரீரத்தில் இருந்து வரும் சங்கடங்கள் அதிலும் தன்னிலும் மூத்தவர்களின் தயவு கிடைக்கும் அரசு வகையில் அனுகூலம் இருக்கும். ஸ்திர சொத்துக்களின் சேர்க்கை உண்டு. நண்பர், சகோதரர்களால் சகாயம் அடைவீர்கள். பெற்றோர்களின் ஆசைகளை பூர்த்தி செய்வீர்கள். பூர்வீக சொத்து சில கைக்கு கிடைக்கலாம் கூட்டு முயற்சியால் சில காரியம் நடந்தோறும் சில கௌரவப் பதவி, பரிசு, பத்திரிகை, பாராட்டு கூட இருக்கும் வெளிநாட்டு தொடர்பு உண்டு. விவசாயம், மருத்துவம், நிதி, நீதி எஸ்போட், இதன் ஜீவனம் ஆதாயமே.

**துலாம்:** அரசு விசயங்களில் மிகவும் கவனமாக எச்சரிக்கையாக இருக்கவும். குடும்பம், தொழில் சம்பந்தப்பட்ட ரகசிய எதுவானாலும் பிற நபரிடம் வெளியிடக் கூடாது அது. உங்களுக்கு ஆபத்தாக கூட முடியலாம். யாரையும் நம்பி எந்த ஒரு முக்கிய பொறுப்புக்களையும் ஒப்படைக்க வேண்டாம். பெற்றோர்களுக்கு சில பலவீனங்கள் இருக்கும் எதிர்பாராத விரையங்களும் உண்டு. தொலைதூர பயணங்களால் பிரயோசனம் இல்லை. சில சொத்துசிக்கல்கள் உண்டு பெண்கள் விசயத்தில் அதிக கவனம் அக்கறை தேவை. மருத்துவ செக்கப் பார்த்துக்கொள்ளவும்.

**விருச்சிகம்:** இடமாற்றங்களுடன் கூடிய பதவி உயர்வு, ஜீவன மாற்றங்களில் அமையும். தொழிலில் சில புதுமைகளை புகுத்தி நன்கு விளம்பரம் செய்து அதிக ஆதாயம் வருகிற மாதிரி செய்து கொள்வீர்கள். தன் இனபந்துகளில் ஆதரவு உண்டு. அதிஸ்டமுடைய குழந்தைகள் பிறப்பார்கள். சொத்து வாங்கும் யோகமும் உண்டு. அயன சயன போக போக்கி யங்கள் யாவும் நல்லபடியாக இருக்கும். கவர்ச்சி கலை, ஜுவல்லரி, இன்ஜினியரிங், ஆன்மீகம், பத்திரிகை, சினிமா, உணவு இதன் ஜீவனம் ஆதாயமே.

**தனுசு:** முகத்தில் ஒரு தெளிவு, விதவிதமாக ஆடைகள் பல சுகசௌகரியங்களை அனுபவிக்கும் நிலை. குடும்பத்துடன் நீண்ட தூர சுற்றுலா, வீட்டில் சில சுப நிகழ்ச்சிகள் எல்லாம் சிறப்பாக இருக்கும். சொந்த, பந்தங்களின் வருகையும் உண்டு. நீங்கள் ஈடுபட்டு இருக்கும் ஜீவனத் துறைகளில் பதவி, பவர், நல்ல பணியாட்கள் இப்படி பலவித சகாயங்களை அடைவீர்கள். உங்கள் பி விவசாயம், சுயதொழில், கூட்டுதமுயற்சி எதுவாயினும் ஏற்றமே.

**மகரம்:** வேலை தெரிந்த ஆட்களை விட்டு விட வேண்டாம். எதையும் தட்டிக் கொடுத்து காரியம் கைகொள்வதே நல்லது. சில கடன்களை கூட வாங்க நேரிடும். பயனுடைய செலவுகளே கொடுக்கல், வாங்கல்களில் கவனமாக செயல்படவும். இடமாற்றம். தொழில் நிமித்தமான பயனங்கள் இருக்கும். தாய்மாமன் தன் உறவுகளில் சில மன பாதிப்பு உண்டு கால்நடை சேரம் உண்டு. உடல் கட்டுப்பாடுகள் அவசியம் தேவை.

**கும்பம்:** சரியான அமைப்பிலே பணிகளை செய்து கொள்வீர்கள். வீட்டில் சில பூஜைகள், சுபகாரியம், விழாக்கள் இருக்கும். உத்தியோகம், தொழில் ரீதியில் சில மாற்றங்கள் ஏற்படலாம். குழந்தைகளின் எதிர்காலத்திற்கு என்று சில திட்டங்களை செய்து வைப்பீர்கள். குடும்பத்துடன் குதூகலப் பயணங்கள் இருக்கும். பொது நிகஇழ்ச்சிகளில் கூட சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வீர்கள். நெருப்பு, பூமி, மீடியா, எந்திரம் கல்வி, நிறுவகம், காப்பகம், பழுதுபார்த்தல் இதன் ஜீவன் முன்னேற்றமே.

**மீனம்:** புதிய முயற்சிகள், முதலீடுகள் வேண்டாம். விவகாரம், வியாஜ்ஜியங்களில் கூட விவேகமாக போக வேண்டும். அகால உணவு, உறக்கம் உண்டு. புத்திரர்களுக்கு புலம்பல் பலவீகங்கள் ஏற்பட்டு மறையும். சொந்த பந்தங்களாலும் சில தொந்தரவுகள் இருக்கும். தன் சரீர ரீதியில் தடுமாற்றம் உண்டு அரசு விசயங்களில் சில பணம் செவிட வேண்டியும் வரும் ஜாமின் விசயம் தவிர்க்வும்.

"வேதாகம கிரியா ஜோதி" சிவஸ்ரீ இரவீந்திர உமா சுதக்குருக்கள்
ஸ்ரீ லக்ஷ்மி சமேத நரசிங்கர் தேவஸ்தானம், பூந்தோட்டம், வவுனியா. 077 2265778

வவுனியா பஜார் வீதி இல: 166இல்

உதயமாகியுள்ளது

# Milano

## Bake House & Cool Spot



Bekary Food Items
Icing Cake
Butter cake
Bomby Sweets
Ice cream
Juice

No:166, Bazaar Street, Vavuniya. 077 7282490




Printed by Vijay Printing Centre, and Published by Print Land Publication, No:172B, Mill Road, Vavuniya. in July, 2014